பக்கங்கள் 32

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை 18.05.2025 | அதிர்வு 287







# தமிழினப் படுகொலை நினைவேந்தல் இன்று

## முள்ளிவாய்க்காலில் அணிதிரளுமாறு அழைப்பு



இலங்கையில் இறுதிப் போரில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவுகூரும் 16ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்றாகும். இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவியும் புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் தேசங்களிலும் இந்த நினைவு நாளை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

05▶






இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, பகிரங்க வெளிகளில் கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றமை – செயற்படுகின்றமை – தமிழரசுக் கட்சிக்குள் இப்போது நெருக்கடிக் கட்டத்தை எட்டியிருப்பதாகத் தெரிகிறது.

சிறிதரன் வழங்கிய நேர் காணல் ஒன்று தொலைக் காட்சியில் இன்று மாலை ஒளி பரப்பாக இருக்கிறது. அதன் முன்னோட்டத்தில் கட்சியின் செயலாளராக சுமந்திரனைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அவர் பதில் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமை இன்னும் கட்சியின் பொதுக்குழுவால் அங்கீகரிக்கப் படவில்லை என்றும் சாரப்பட அந்தப் போட்டியில் சிறிதரன் தெரிவித்த கருத்துக்கள்

03▶






# மட்டு. கல்லடிப் பால வாவியில் மின் விளக்குகளுடன் இரவில் மிதந்து வந்த இன அழிப்பு நினைவுத் தூபிகள்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்லடி பாலத்து வாவியில் இன அழிப்பு வாரத்தை நினைவு கூர்ந்து மின் விளக்குகள் அலங்கரிக்கப்பட்டு இன அழிப்பின அடையாளமான முள்ளிவாய்கால் தூபியினை கொண்ட படங்கள் மற்றும் கறுப்பு, சிவப்பு, மஞ்சல் கொடிகள் ஏற்றப்பட்டு மிதக்கும் வகையில் அமைக்கப்பட்ட இரண்டு மிதக்கும் தூபிகள் நேற்று சனிக்கிழமை இரவு 9 மணியளவில் மிதந்து வந்ததையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இரவில் மின்விளக்குகள் ஒளிர்ந்த வண்ணம், மனிதர்கள் இன்றி இரு சிறிய படகுகள் போல மர்மான பொருள் வாவியில் ஒரு மணித்தியாலம் மிதப்பதை மக்கள் அவதானித்தமையை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அங்கு விரைந்து வந்த புலனாய்வுப் பிரிவினர், பொலிஸார் அவற்றை மீட்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அந்த மர்மான படகுகள் முகத்துவாரம் நோக்கி வாவியில் நகர்ந்து கொண்ட நிலையில் டச்பார் பகுதி வாவிக்கரையில் அமைந்துள்ள மீன்பிடிபடகு தயாரிக்கும் கட்டட பகுதியில் கரையடைந்தன. அங்கு சென்ற பொலிஸார் அவற்றைக் கரைக்கு இழுத்து கொண்டு வந்து மீட்டனர்.



சுமார் 4 அடி நீளம் கொண்ட சதுரமான றெஜிபோமில் நடுவில் முள்ளிவாய்கால் அமைந்துள்ள நினைவு தூபி போன்ற படம் நிறுத்தப்பட்டு அதில் "தலைமகனின் வீர வணக்க நாள், இன அழிப்பு வாரம் 12 வைகாசி முதல் 17 வைகாசி வரை, பொங்கு தமிழ் பேரவை" என வாசகம் பொறிக்கப்பட்டு, அதற்கு அருகில் கறுப்பு, சிவப்பு, மஞ்சல் கொடிகள் ஏற்றப்பட்டு, அதனை சுற்றி மொழுகு திரி போன்ற வடிவிலான் மின்விளக்குகள் ஒளிரவிட்டு மிதக்கும் முறையில் அது தயாரிக்கப்பட்டு வாவியில் விடப்பட்டுள்ளன.

இந்த நினைவு தூபியை யார் அமைத்தது, இதனை எங்கிருந்து வாவியில் விட்டார்கள் எனத் தெரியாது அரச புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் திக்கு முக்காடினர். மீட்கப்பட்ட அந்தபத் தூபியை பொலிஸ் நிலையத்துக்கு அவர்கள் கொண்டு சென்றுள்ளனர்.

# நீர் நிரம்பிய குழியில் விழுந்து மூன்றரை வயது சிறுவன் சாவு!

அனுராதபுரம் – கல்நேவ பகுதியில் நீர் நிரம்பிய குழியில் விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரம் – கல்நேவ பகுதியைச் சேர்ந்த மூன்றரை வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி சிறுவன் நேற்றுமுன் தினம் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரெனக் காணாமல்போயுள்ளார்.

பின்னர் சிறுவனின் பெற்றோர் அயலவர்களின் உதவியுடன் சிறுவனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சிறுவன் நீர் நிரம்பிய குழியில் விழுந்து கிடப்பதை அவர்கள் கண்டுள்ளனர்.

பின்னர் சிறுவனின் பெற்றோர் சிறுவனை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் அதற்குள் சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் நெகம்பஹ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்நேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

வெளியாகி உள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பின்படி, கட்சியின் நிர்வாகிகள் பொறுப்பில் ஏற்படும் வெற்றிடங்கள் மத்திய குழுவினால் நிரப்பப்படும் என்றே கூறப்படுகின்றது. அதற்குப் பொதுக்குழுவைக் கூட்டி அங்கீகாரம் பெறத் தேவையில்லை. ஆகையினால் இப்போது கட்சியின் பதில் தலைவர், பதில் செயலாளர் என்ற பேச்சு எதுவும் இல்லை என்பதுதான் உண்மையான நிலைமை. சட்ட ரீதியான ஒழுங்கு.

அது குறித்து நேற்றுப் பகல் யாழ்ப்பாணத்தில் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் சுமந்திரன் தெளிவாக விளக்கமளித்தார்.

அந்த உரையின் முழு விவரம் இன்னொரு நாள் 'முரசு பத்திரிகையில் பிரசுரமாகும். ஆயினும் முக்கிய சில விடயங்களை இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

சுமந்திரனைப் பொதுச்செயலாளராக தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற சிறிதரனின் பகிரங்க அறிவிப்பு கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் அறுதிப் பெரும்பான்மையோடு தமிழரசுக் கட்சி வெற்றிபெற்று இரு சபைகளுக்கு தவிசாளர், பிரதி தவிசாளர் நியமனத்தில் நெருக்கடியை தரப்போகின்றது. அதனால் அந்த சபைகள் கூடுவது கால வரையறையின்றி தள்ளிப் போக அல்லது சிறிதரனின் ஏற்பாட்டில் இணக்கம் காணப்பட்ட தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள் அல்லாத வேறு நபர்கள் அப்பதவிக்கு வரக்கூடிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அவை கரைச்சி பிரதேச சபை மற்றும் பூநகரி பிரதேச சபை ஆகியவையாகும். இவற்றில் ஒன்றுக்கு சிறிதரனின் வலது கையான வேழமாலிகிதன் தவிசாளர் பதவிக்கு சிறிதரனின் பரிந்துரையில் தேர்வாகி இருந்தார். இவர் முன்னர் சுமந்திரனுக்கு எதிராகப் பகிரங்கமாகக் கருத்துக்கள் வெளியிட்டவர். பின்னர் சுமந்திரனுக்கு மன்னிப்பு கடிதம் சமர்ப்பித்து, பகிரங்கமாக ஊடகவியலாளர் மாநாட்டை கூட்டி சுமந்திரனிடம் மன்னிப்பு கோரிய பின்னணியிலேயே அவருக்கு உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த மன்னிப்பு அறிவிப்பின் பின்னரே வேழமாலிகிதனின் பெயரையும் சேர்த்த வேட்பு மனுவில் கட்சியின் பொதுச்செயலாளராக சுமந்திரன் ஒப்பமிட்டார்.

அந்த விடயத்துக்குள் இறங்க முன்னர், நேற்று நல்லூர்க் கூட்டத்தில் சுமார் 40 நிமிட நேரம் கட்சி விடயங்களை முழங்கித் தள்ளிய சுமந்திரனின் பேச்சில் சில பகுதிகளை மாத்திரம் இங்கு, இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு முன்னர் ஒரு விடயம்.

சுமந்திரன் உரையாற்றுவதற்கு முன்னதாகக் கட்சித் தலைவர் சி.வி. கே.சிவஞானம் உரையாற்றியிருந்தார். கட்சியின் கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உள்ளூராட்சி சபை புதிய உறுப்பினர்களுக்கு ஆரம்பத்திலேயே கடும் எச்சரிக்கை விடுத்தார் அவர்.

தமது உரையில், இன்னொரு தமிழ் கட்சியை சேர்ந்த ஒருவர் தமிழரசுக் கட்சித் தரப்பினரை 'குரங்குகள்' என்று பேசி விமர்சித்தமையை சிவஞானம் கடுமையாக வைதார். அது குறித்து விசனம் தெரிவித்தார்.

சரி, இனி நேற்றைய நிகழ்வில் சுமந்திரன் குறிப்பிட்ட சில விடயங்களை முதலில் அவரது வார்த்தைகளிலேயே நோக்குவோம்:-

"எவரும் எங்களுடைய கட்சியில் 'இவரை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன், அவரை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்' என்று சொல்வதற்கு அருகதையும் இல்லை, அதிகாரமும் இல்லை. அதற்கு உரித்தும் கிடையாது. அதனை இன்று பகிரங்கமாகச் சொல்லி வைக்கிறேன்.

"பொதுச் செயலாளர் கையெழுத்து வேண்டும். ஆனால் அவரை பொதுச் செயலாளராக ஏற்றுக் கொள்ள மாட்டாராம். என்ன முட்டாள்தனமான பேச்சு இது? பொறுப்பான பேச்சா இது? தலைவரிடம் ஓடி வந்து 'ஐயோ... பொதுச் செயலாளரிடம் கையெழுத்து வேண்டி தாருங்கள்!' என்று கேட்க முடிகிறது. என்னைப் பொதுச் செயலாளராக ஏற்க முடியாது என்றால் என்னுடைய கையெழுத்து ஏன் உங்களுக்கு? பதில் சொல்ல வேண்டும். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். என்னைப் பொதுச் செயலாளராக ஏற்றுக் கொள்ளாத எவருக்கும் என்னுடைய கையெழுத்தை நான் வைக்கத் தேவையில்லை. வைக்க வேண்டுமா என நீங்களே சொல்லுங்கள். நான் வைக்க மாட்டேன். பொதுச் செயலாளராக என்னை ஏற்றுக் கொண்டபடியால்தானே ஓடி வந்து என்னுடைய கையெழுத்தைக் கேட்கிறீர்கள்.

"ஓடிப்போய் பகிரங்கமாக ஊடக மாநாடு நடத்தி மன்னிப்பு கேட்பது எதற்காக? கையெழுத்தை வேண்டுவதற்காகத்தானே? பொதுச் செயலாளராக எனை ஏற்றுக் கொள்வதால்தானே...?

"இந்தக் குரங்கு சேட்டைகளை நமது கட்சிக்குள் வைத்திருக்கக் கூடாது. கட்சிக்குள் இருக்கும் எவரும் இந்தச் சேட்டைகளை விடக்கூடாது. இந்தக் குரங்குச் சேட்டைகளைச் செய்வதால்தான் நாங்கள் 'குரங்குகள்' என்று வெளியில் இருப்பவர்கள் சொல்லுகிறார்கள்.

"இது தெளிவாக எல்லோருக்கும் தெரிய வேண்டும். பகிரங்கமாக ஒரு குற்றச்சாட்டு வைக்கப்படுகின்றது. இந்தத் தேர்தல் தொடர்பாக யாரோ ஒருவருடைய ஆதரவாளர் என்பதற்காக சிலருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கவில்லை எனப் பகிரங்கமாக கூறப்பட்டது. எனக்கு அப்படித் தெரியாது. அப்படிப் பகிரங்கமாக சொன்னவரிடம் விவரங்கள் கேட்டேன் - உடனடியாக விவரங்கள் தரும்படி. யார் அப்படி நியமனம் கொடுக்காமல் மறுத்தார்கள் என்று விவரங்களை தாருங்கள், உடன் நடவடிக்கை எடுக்கிறேன் என்று. இன்று வரைக்கும் பதில் இல்லை. பொது வெளியில் குற்றச்சாட்டு வைப்பது இலகுவான விடயம். விவரத்தைக் கேட்டால் பதில் இல்லை. மிகப் பொறுப்பற்ற செயற்பாட்டில் செயற்படுபவர் யார் என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும். நாங்கள் கட்சியின் ஒற்றுமை கருதி - கட்சியின் கட்டுப்பாடு கருதி - பண்பாடு கருதி - பல விடயங்களை வெளிப்படையாக பேசுவது இல்லை. இது உள் வீட்டு விடயம். நீங்கள் எல்லோரும் கட்சியின் உள்வீட்டுக்காரர்கள். ஆகையினால் உங்களுடன் பேசுகிறேன்.

"நாங்கள் அப்படிப் பகிரங்க வெளியில் பேசுவதில்லை என்பதற்காக, யாரும் எங்கள் தலையில் ஏறி இருந்து மிளகாய் அரைக்கலாம் என்று நினைக்கக் கூடாது. எங்கள் தலையில் ஏறி இருந்து மிளகாய் அரைக்கலாம் என்று எவரும் நினைக்கக் கூடாது. கட்சிக் கட்டுப்பாடு மிக மிக முக்கியம். தலைவர் அதை இங்கு தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"கட்சிக் கட்டுப்பாட்டை விட்டு விலகினால் வெளியே போகலாம். பூரண சுதந்திரம் இருக்கிறது. கட்சி செய்வது உங்களுக்கு விருப்பமில்லை என்றால் நீங்கள் போகலாம். யாரும் உங்களை இங்கு பிடித்து வைத்திருக்கவில்லை. கட்டி வைத்திருக்கவில்லை. நீங்கள் போகலாம். பூரண சுதந்திரம் இருக்கின்றது. வெளியில் போகலாம். பிறகு மீண்டும் மன்னிப்பு கேட்டுவிட்டு உள்ளுக்கு வரலாம். இவையெல்லாம் எங்கள் கட்சியில் நடக்கும் விடயங்கள்தான். ஆனால் கட்சிக்கு உள்ளே இருந்து கொண்டு, கட்சியை மீறி செயல்படுவதற்கு ஒரு போதும் நானோ தலைவரோ இடம் அளிக்க மாட்டோம். அதைத் தெளிவாகக் கூறி வைக்கிறேன். வாயால் பேசுகின்ற விடயத்தையும் சேர்த்துதான் செயற்படுவது என்று கூறுகிறேன்." - என்றார் சுமந்திரன்.

சரி இனி விடயத்துக்கு வருவோம்.

கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபைகளில் இலங்கைத் தமிழரசு கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருப்பதால் அக்கட்சியின் சார்பில் இச் சபைகளில் தவிசாளர், பிரதி தவிசாளர் பொறுப்புக்களை பெறுவோரின் பெயர்களை கட்சியின் செயலாளர், தேர்தல் ஆணையத்துக்கு அறிவிக்க வேண்டும்.

இரண்டுக்கும் தவிசாளர், பிரதித் தவிசாளர்களை தேர்வு செய்து அந்தப் பெயர் விவரங்களை கட்சித் தலைவர் சி.வி. கே.சிவஞானம் ஊடாக செயலாளர் சுமந்திரனுக்கு அனுப்பி வைத்திருக்கி

தொடர்ச்சி ▼



# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசிதவின் வாகனம் மீது நேற்றிரவு துப்பாக்கிச் சூடு!

## முக்கிய ஆவணங்கள் பறிப்பு

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லோலுவ உட்பட மூவரை ஏற்றிச் சென்ற வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துவிட்டு துசித ஹல்லோலுவவுக்குச் சொந்தமான ஆவணங்களின் கோப்புகளைப் பறித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாரஹேன்பிட்டி, கிரிமண்டல மாவத்தை பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைத் துசித ஹல்லோலுவ கண்டபடி விமர்சித்திருந்தார். அதையடுத்து அவர் சி.ஐ.டி. விசாரணையை எதிர்கொண்டிருந்தார்.

அதேவேளை, தேசிய லொத்தர் சபையில் பணியாற்றிய காலத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக அவரிடம் விசாரணை இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி ▲

### இரகசியம் பரகசியம்...

றார் சிறிதரன். ஆனால் இப்போது தம்மைப் பொறுத்தவரை சுமந்திரனைக் கட்சிப் பொதுச் செயலாளராகத் தாம் ஏற்கவில்லை என்று பகிரங்கமாக சிறிதரன் தொலைக்காட்சிப் பேட்டியில் அறிவித்திருக்கின்றமையால், அவர் பரிந்துரைத்துள்ள பெயர்களை தேர்தல் ஆணையத்துக்கு கட்சியின் பொதுச் செயலாளராக ஒப்பமிட்டு அனுப்ப மாட்டேன் என்று சுமந்திரன் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் நேரடியாகக் கூறிவிட்டார் எனத் தெரிகிறது.

அது மாத்திரமல்ல, பூநகரி பிரதேச சபைத் தலைவராக சிறிதரன் தரப்பினால் பிரேரிக்கப்பட்டுள்ள உறுப்பினருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து, இன்ன காரணத்தினால் நான் தங்களுடைய பெயரை தேர்தல் ஆணையத்துக்கு பரிந்துரைக்கவில்லை என சுமந்திரன் தெரிவித்து விட்டார் எனவும் அறிய வந்தது.

இனிமேல் இந்த விடயத்தை சிறிதரன் கையாண்டு ஏதோ ஒரு வகையில் சுமந்திரனை சமாளித்தாலன்றி, இந்த இரண்டு பிரதேச சபைகளுக்கும் சிறிதரன் தரப்பு பிரேரித்த பெயர்களை கட்சியின் பொதுச் செயலாளராக சுமந்திரன் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்க மாட்டார் என்பது உறுதியாகி உள்ளது.

ஒன்றில் கட்சி தவிசாளர், பிரதி தவிசாளர் நியமனங்கள் தெரியாத காரணத்தினால் இந்த இரண்டு சபைகளும் இயங்காத நிலையில் நீடிக்கலாம். அல்லது சிறிதரன் தரப்பு பரிந்துரைத்த நபர்களை விட வேறு வேறு ஆள்களுக்கு அந்தப் பதவிகள் போகலாம்.

கட்சியின் செயலாளர் இத்தகைய சபைகளின் தவிசாளர், பிரதித் தவிசாளர் பெயர்களை அறிவிக்க வேண்டும் என்பது சட்ட ஏற்பாடு. ஆகையினால் அது நிறைவு செய்யப்படும் வரை சபையின் கூட்டத்தை கூட்ட முடியாத நிலை நீடிக்கும் என்று கூறப்படுகின்றது.

மேற்படிப் பெயர்களைக் குறிப்பிடுவதற்கான கால அவகாசம் நாளையுடன் முடிவடைகின்றது. இன்று மாலை சுமந்திரன் வெளிநாடு செல்வதால் சில தினங்கள் கழித்து அவர் நாடு திரும்பும் வரை விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாக அப்படியே கிடக்கும் என்பதுதான் நிலைமை.

ஏற்கனவே கட்சியின் முடிவுக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் பொதுத் தமிழ் வேட்பாளரை ஆதரிப்பது போன்ற பல முடிவுகளில் தம் இஷ்டப்படி எடுத்துச் செயற்பட்டு வந்தவர் சிறிதரன். இப்போது பொதுச் செயலாளராக சுமந்திரனை தாம் ஏற்கவில்லை என்ற அவரின் அறிவிப்பின் அடிப்படை அல்லது அர்த்தம், சுமந்திரன் செயலாளராக இருக்கும் கட்சியில் – அல்லது இடத்தில் – தான் இருக்க மாட்டார் என்பதுதான். அவரின் வழி இனி எத்திசையில் போகப் போகின்றது என்பதைப் பார்த்திருப்போம்.

நேற்றைய பேச்சில் 'சாராயபவன்' பற்றியும் சுமந்திரன் விவரமாக பிரஸ்தாபித்தார். அதனை அடுத்து வரும் தினங்களில் பார்ப்போம்.

# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்கக் கோரி ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு!




யாழ். வலிகாமம் வடக்கில் இது வரை விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்கக் கோரி பொதுமக்களால் வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு வள நிலையம் என்னும் பொது அமைப்பினூடாக வலிகாமம் வடக்கின் மயிலிட்டி, பலாலி, தையிட்டி உள்ளடங்கலாகக் காணப் படும் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்குமாறு கோரி பிரதேச மக்க ளால் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது.

நீண்ட காலமாகக் கடற்றொழில் மற்றும் விவசாயம்செய்வதற்கும் தமது இருப்புக்குமான சொந்த நிலங்கள்

இன்னமும் முழுமையாக விடுவிக் கப்படவில்லை எனவும், படிப்படியாக விடுவிக்கப்பட்டு வரும் நிலையில் முழுமையாக இன்னமும் விடுவிக்கப்படா மையை ஆளுநரிடம் எடுத்துக்கூறியும் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதில் வழங்கிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தற்போதுள்ள ஜனாதிபதியின் காலத்தில் காணிகள் அனைத்தும் படிப்படியாக விடுவிக்கப்படும் என உறுதியளித்தார் என்று காணி உரிமையாளர்கள் குறிப் பிட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி





### தமிழினப் படுகொலை...

பிரதான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத் தில் நடைபெறவுள்ளது. முற்பகல் 10.15 மணிக்கு கொள்கைப் பிரகடனம் வாசிக் கப்படும். 10.29 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு 10.30 மணிக்கு அகவணக் கம் செலுத்தப்படும். இதைத் தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்படும். பொதுச் சுடர் ஏற்றப்படும் சமநேரத்தில் நினைவேந் தலில் பங்கேற்பவர்கள் தீபங்களை ஏற்றுவர். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

பிரதான நினைவேந்தல் நிகழ்வுக்கு முன்னதாக காலை 6.30மணி முதல் முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரையில் போரில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிதிர்க்கடன் கிரியைகள் நடைபெறவுள்ளன.

இதேநேரம், “தமிழினப் படுகொலை நாளான மே 18 தினத்தில் (இன்று) நாம் அனைவரும் திரளாகக் ஒன்றுகூடி எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் அநீதிக்கு நீதி வேண்டியும் ஒன்றுபடுவோம். கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரு வோம். நாம் அழிக்கப்பட்டோம் என்ற விடயத்தை உரத்துச் சொல்ல இணை வோம்.” – என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடக்கு, கிழக்கு பொதுக் கட்டமைப்பின் இணைத் தலை வர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆமஸ்ரோங் அழைப்பு விடுத்துள் ளார்.

இதேசமயம், முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வை வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களிலும் நிகழ்த்துவதற்கு அரசியல் கட்சிகள், பொதுக் கட்டமைப்பு கள், பொது நிறுவனங்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஆரம் பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 4 கட்ட ஈழப் போர்களாக நடைபெற்றன.

இறுதிப் போர் கட்டம் 2006 – 2009 மே வரை நீடித்தது. மோதலில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் அகப்பட்டனர். இறுதியாக முள்ளிவாய்க் கால் என்ற சிறு நிலப்பரப்புக்குள் மக்கள் முடக்கப்பட்டபோது மனித குலத் துக்கு எதிரான விரோத செயல்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்கள் – துயரங் களை – அழிவுகளைச் சந்தித்தனர்.

இறுதிக்கட்டத்தில் மட்டும் 40 ஆயி ரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித் தது. இந்தப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட மே 18ஆம் திகதி தமிழின அழிப்பின் அடையாள நாளாக தமிழ் மக்கள் நினைவேந்தி வருகின்றனர்.

கொல்லப்பட்ட தமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அதேநேரம், படுகொலை செய்யப்பட்ட தமது இன மக்களுக்காக நீதி கோரும் நாளாகவும் இந்த நாள் கடைப்பிடிக் கப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.





## உப்பைக் கூடச் சரியாக வழங்க முடியாத

# அரசின் அச்சுறுத்தலுக்கு அடிபணியோம்! குட்டி சபைகளில் எதிரணி ஆட்சி மலரும்!!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

நாட்டு மக்களுக்குத் தேவையான உப்பைக் கூட இந்த அரசால் வழங்க முடியாது போயுள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நாட்டில் தற்போது வினைத் திறன் அற்ற அரச நிர்வாகமே காணப் படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும் திறமை யானவர்களாக இருந்தாலும், மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களிடம் பதில்களோ தீர்வுகளோ இல்லை." – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறியும் "கிராமத்துக்கு கிராமம் நகரத் துக்கு நகரம்" வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு, 'மல்லிகாராம வீடமைப்புத் தொகுதி' மக்களுடன் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

"ஆளும் தரப்பினர் உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தை நிறுவுவதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இல்லை என்று மிரட்டல் விடுத்து வருகின்றனர். தற்போதுள்ள தேர்தல் முறைமையின் கீழ் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப் படையில் அதிகாரத்தை அமைக்கும் உரிமை எதிர்க்கட்சிக்கும் காணப்படுகின்றது. எனவே, உப்பைக் கூட சரியாக வழங்க முடியாத அரசின் இந்த அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அஞ்சாது." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

"எதிர்க்கட்சிக்குப் பெரும்பான்மை காணப்படும் உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தை நிலைநாட்டவும், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தவும் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் எடுக்க முடியுமான அதிகபட்ச நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும்." – என்றும் அவர் மேலும் கூறினார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இன்றைய பிரதிக்ஞை!

ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டம் சரியாக 16 ஆண்டுகளுக்கு முன்னர் இதே மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் தமிழினத்தின் பேரவலத்தோடு முடிவுற்றது.

தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தைக் கருவறுக்க பௌத்த - சிங்களப் பேரினவாதம் பேயுருக் கொண்டு, இனவழிப்புச் சந்நதமாடி, பல லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த கொடூரக் காதையின் அவல அத்தியாயம் ஒன்று இத்தினத்தில் முள்ளிவாய்க்காலோடு முடிவுற்றது. அதனால் ஈழத் தமிழர்களின் ஆன்மாவில் ஆற்ற முடியாத பெரும் வடுவாக ஆளப் பதிந்து போன ஒரு தினம் இது.

ஆயினும், முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய மனிதப் பேரவலம் தமிழினத்தின் மீதான இனவழிப்பின் ஆரம்பமோ, முடிவோ அல்ல. நீண்ட தொடரான இனவழிப்பின் ஆழமான ஓர் அங்கம் மட்டுமே அது.

அந்த வீரியத்திலும், அந்தக் கோரக் கோடூரத்தின் வீச்சிலும் இனவழிப்பு தற்போது களத்தில் கட்டவிழவில்லையாயினும் தமிழர் தேசம் மீதான இனவழிப்பு என்ற பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் நாசகார நடவடிக்கைகள் கடந்த 75 ஆண்டுகால தனது மூர்க்கத்தைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

எனவே, முள்ளிவாய்க்கால் என்பது பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல, அது அடக்குமுறையின் குறியீடும் கூட.

முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக்கொண்டு முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிப் போன தேசத்து உறவுகளுக்காக சுடரேற்றி அஞ்சலி செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் இன்று ஈடுபடவுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் நீங்காப் பெருவலியைத் தந்த அந்தக் கணங்களை வலிமை கொள்ள வைக்கும் கணங்களாக மாற்றுவதற்கான எழுச்சிச் சிந்தனையோடு அனைத்துத் தமிழ் மக்களும் இன்று அஞ்சலி செலுத்த அணிதிரள்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவு நாளில், பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட உறவுகளை நினைந்து, அவர்கள் சுமந்து வந்த கனவுகளையும், இலக்குகளையும் மனத்தில் பதித்து, அவர்களின் குருதி உறைந்து சிவந்து போன மண்ணிலிருந்து நாம் சபதம் எடுக்க வெண்டும்.

அவர்களின் மரணத்துக்குக் காரணமான கொடுங்கோன்மையாளர்களை சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைப் பொறிமுறையின் முன் நிறுத்தி, உண்மைகளை வெளிக்கொணர்ந்து, குற்றவாளிகளை அடையாளப்படுத்தி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தச் செய்து, பேரினவாதத்தின் கோர முகத்தை அம்பலப்படுத்துவதன் மூலம் நமது அந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்கும் தமிழர் தேசத்தின் மீட்சிக்கும் உறுதியாக நிற்போம் என்று இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சமயத்தில் ஈழத் தமிழினம் பிரதிக்ஞை செய்ய வேண்டும்.

முள்ளிவாய்க்கால் அனர்த்தம் என்பது ஓர் அரசியல் போக்கின் - போராட்டத்தின் - முடிவு. ஆனால், அது இன்னொரு போக்கிற்கான - போராட்டத்திற்கான - ஆரம்பமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அதில் தவறியிருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

அது குறித்துச் சிந்தித்து, காலம் பிந்தியேனும் புதிய - சாத்தியமான - முறையில் அதைக் கட்டமைப்பது குறித்து இன்று உறுதி கொள்வோம்.



# தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் போக்குவரத்து அமைச்சு அதிருப்தி

ரயில்வே திணைக்களத்தில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக 909 பேரை சேவையில் இணைத்துக்கொள்ள இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளாக 106 பேரை சேவையில் இணைக்க அனுமதி பெறப்பட்டதாகவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைகளுக்கான தீர்வுகள் அமைச்சு மட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவை நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் திணைக்களத்தின் அசமந்தநிலை குறித்து கலந்துரையாடி தீர்வுகாணாது பொதுமக்களை சிரமத்துக்கு உள்ளாக்கி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் போக்குவரத்து அமைச்சு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.



# கடற்றொழிலாளர்கள் அவதானமாக செயற்படவும்

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில், நாளை வரையில், மணிக்கு சுமார் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடும் எனவும், இதனால் குறித்த பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே, கடற்றொழிலாளர்கள் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மன்னாரிலும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தமையால், கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் கரைக்கு திரும்பியதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

அத்துடன், தம்பலகாமம் பகுதியில் பலத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல பகுதிகளில் வீட்டின் கூரைகள் சேதமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.


இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

24

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பண்டா - செல்வா ஒப்பந்தம்.

தனி மனிதனாக ஜனாதிபதி அநுரா பழகுவதற்கு இனிய மனிதர். மக்களைக் கவரும் வசீகரம் கொண்டவர். எளிமையானவர். அரசியலில் நாடாளுமன்ற அங்கத்தினராக 2000 ஆம் ஆண்டிலிருந்தும், பின் அமைச்சர் பதவியை வகித்தும், அவரது கைகளில் கறை படிந்துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் கிடையாது. அவர் அமைச்சராக இருந்த போது அவரின் கீழ் விவசாயம், கால்நடைகள், காணி, நீர்ப்பாசனம் ஆகிய அமைச்சுகள் வந்தன. அந்தப் பகுதியில், அவர் கண்டியில் தலதா மாளிகையின் சுற்றயலில், மாளிகையின் கீழ்வரும் ஏரியை நீர்ப்பாசன திணைக்களத்தின் செலவில் துப்புரவாக்கி மீளமைத்தமை பற்றி சிலர் புருவங்களை உயர்த்தினாலும், அது பௌத்த சாசனத்தை பாதுகாக்க என ஒருவரும் பிரச்சுனை தரவில்லை.

வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் அல்லாடிய குடும்பத்தில் பிறந்து, சிக்கனமான வாழ்க்கையை ஏற்று, தனது சுய முயற்சியால் படித்து முன்னேறியவர்.

அவர் அரசியலில் முன்னேறுவதற்கு நம்பிக்கையாகவும் நம்பியும் நடந்தமை முக்கியம்.

தனிப்பட்ட வாழ்க்கையில் உறுதியான சிங்கள – பௌத்த தேசியவாதி. பௌத்தத்தை தன்னுடைய மதமாக ஏற்றுக் கொண்டு மாக்ஸியவாதியாக – புதிய பரிணாம மார்க்சியவாதியாக (Neo Marxist) – நடைமுறை வாதியாக பார்க்கப்படுபவர். கட்சியை வளர்க்கும் காலங்களில் எல்லா நிகழ்ச்சிகளிலும் இடதுசாரி, மார்க்ஸிய பாணியில் சிவப்புச் சேர்ட்டில்தான் காணலாம். இப்போதெல்லாம், தேசிய மக்கள் சக்தியை உருவாக்கிய பின், சிவப்பு சேர்ட்டுக்கு முக்கியத்துவம் இல்லை. அவர் மாறிவிட்டார். உண்மைக்குப் புறம்பில்லாமல் நடப்பவராக அறியப்படுவதால் அவர் தனது கொள்கை விசுவாசத்தில் தனக்கும் தனது கட்சிக்கும் மாறாக நடக்கவில்லை. கட்சி எடுத்த முடிவுகளில் காத்திரமாகப்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?


ஒப்பந்தத்துக்கு எதிராக பண்டாரநாயக்காவின் கொழும்பு றொஸ்மிட் பிளேஸ் இல்லத்துக்கு முன் முரண்டு பிடிக்கும் பிக்குகள்.

தொடர்ச்சி▲

பங்கெடுத்து, நாட்டின் இறைமையையும் அதனுடைய ஆட்சிக்குள் அமையும் சகல பிரதேசங்களையும் காப்பதற்கு கங்கணம் பூண்டு, அதற்காகத் தமிழருடைய அதிகாரத்தில் நாட்டின் எந்தப் பிரதேசமும் இருக்கக் கூடாது, அவர்களுடன் எந்த அரசும் அதிகாரப் பரவல் தருவதாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடக் கூடாது என உண்மையான – காத்திரமான – நம்பிக்கை கொண்டிருந்தவர். அந்த நம்பிக்கைகளிலும் கொள்கைப் பற்றிலும் பெரும்பான்மை ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினதும் தலைவர்களே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கோ, அதற்காக நடக்கும் ஆயுதப் போராட்டத்திற்கோ இராணுவ தீர்வு சரியானது அல்ல, பேச்சுவார்த்தையால்தான் அவை அடையப்பட வேண்டும் என்ற கருத்துக்களில் மக்களைத் தயார்படுத்த, மக்களும் சமாதானத்திற்கு ஏங்கி இருக்க, பேரினவாதிகளைத் தேடிச் சேர்த்து, மஹிந்த ராஜபக்ஷ பரப்புடன் இணைந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை (United Peoples Freedom Alliance) உருவாக்கி, சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுத்த ஜனாதிபதி சந்திரிக்காவுக்கான ஆதரவுகள் நீக்கப்படும் என்ற பயமுறுத்தல்களில் ரணிலின் அரசை நேரத்துடன் பதவி நீக்கச் செய்து, பேச்சு வார்த்தைகளைக் குழப்பும் எல்லாம் முயற்சிகளிலும் முன் நின்றவர். அவை கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தவை எனவும் பார்க்கலாம். எனினும் அநுர என்ற தனிமனிதனினதும், அரசியல்வாதியினதும் காத்திரமான பங்கு சமாதான பேச்சுக்களை குழப்பி, முடியும் வரை போர் என்ற கொள்கைகளுக்கு மஹிந்த அரசை தூண்ட, மஹிந்தவினதும் பரிவாரத்தினதும் ஊழல்கள் எல்லாவற்றையும் கண்டும் காணாமலும் மேவிக்கொண்டு போனார்கள்.

ஆனால் 1991ஆம் ஆண்டு தலைவர்களில் அநேகமானவர்கள் அழிக்கப்பட்டு, நலிந்திருந்தவர்கள் கட்சியாக தடை செய்யப்பட்டவர்கள், சந்திரிகாவின் தயவில் பற்றி கொண்டு, கிளைகள் விட்டு, நாடாளுமன்றத்தில் 39 ஆசனங்களை பெற்றவர்கள். 2004 ஆம் ஆண்டிலிருந்து சமாதான பேச்சு வார்த்தைகளையும் போர் நிறுத்தத்தையும் எதிர்த்து, தமிழர்களுக்கு எதுவித சலுகையும் தேவையில்லை, அவர்களுக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டேயாக வேண்டும் என்ற கொள்கை அடிப்படையிலும் கோஷத்திலும் சந்திரிகாவைக் கூட சந்தர்ப்பவாதத்துக்கு மிதித்து முன்னறியவர்கள்.

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றின் தொடக்க காலங்களில் உருவாக்கப்பட்ட பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தம் முக்கியமானது. அதனை ஏற்றுக் கொண்டமையால் பண்டாரநாயக்கா நாட்டை தமிழருக்கு அடகு வைத்து விட்டார் என சிங்கள மக்களை உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு ஏற்றி, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொழும்பிலிருந்து கண்டி வரை (மகாநாயக்க தேரர்களின் காலடிகளுக்கு) பாதயாத்திரை ஒன்றில் சென்றார். பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கை. அவற்றின் எதிரொலியாக அந்த ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட போது, தனது உண்மை தன்மைகளின் நம்பிக்கைகளில் அநுரா மிகவும் கோபாவேசமாக, விடுதலை புலிகள் நாட்டில் தங்களுக்கென்று தனிநாடு ஒன்றை உருவாக்க அத்திவாரங்கள் அமைத்து விட்டனர் என நாடாளுமன்றத்தில் கூறியமை மாத்திரமல்ல, பின்னர் யுத்த நிறுத்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன போல கண்டிக்கு ஐந்தரை நாள்கள் நடைப்பயணம் மேற்கொண்டவர்களில் முக்கியமான கட்சி தலைவர் அவர். பின், சுனாமி புனர்நிர்மாண நிதிகளை விடுதலை புலிகளோடு சேர்ந்து புனர்வாழ்வு திட்டங்களில் செயல்படுத்துவதற்கு சந்திரிகா அரசினால் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகளை உயர் நீதிமன்றுக்கு சென்று ஆட்சேபனை செய்து செயலிழக்கச் செய்தவர்கள்.

2006 இல் அநுரா நாட்டின் பாதுகாப்புக்காக ஒன்றிணைந்த முன்னணி (Joint Front To Protect The Nation) என்ற அமைப்பை ஜே.வி.பி. உருவாக்கிய போது அதில் பெரும் பங்கு தந்து, 2010 இல் தமிழருக்கு அதிகாரப் பரவலைத் தரக்கூடிய எந்த ஓர் அரசமைப்புச் சட்டத்தையும் தான் ஆதரிக்கப் போவதில்லை

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

எனத் தெரிவித்து, பௌத்த பிக்குகளை சந்திக்கும் போதும், மகா சங்கத்தினருடன் உரையாடும் போதும், தேசிய மக்கள் சக்தி அரசமைப்புச் சட்டத்தில் உள்ள சரத்து ஒன்பதை என்றுமே மாற்ற ஒத்துக் கொள்ளாது, ஏனெனில் இந்த நாடு சிங்கள – பௌத்த மக்களினுடையது, அந்தச் சரத்தின் கீழ்தான் அரசாங்கமும் மக்களும் பௌத்தத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்குமான உரிய அதிகாரங்களை தந்துள்ளார்கள், சிங்கள – பௌத்தத்தை பாதுகாக்க வேண்டும் என்பதில் நாட்டு மக்களுக்கு எந்த எதிர்ப்பும் இல்லை என்று கூறி வந்தார்.

அதேபோன்று அவர் வடிவமைத்துக் கொண்ட கொள்கைகளின் உண்மைத் தன்மையான விளக்கங்களில்தான் அநுரா தாங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சிலினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, நாட்டில் இனப்படுகொலை நடக்கவில்லை, பாதிக்கப்பட்ட மக்களே தங்களுக்குப் பரிகாரம் தேவையில்லை என நடந்தவற்றை மறந்து முன்னேற விரும்புகிறார்கள் எனத் தெரிவிக்கும் போது தமிழ் மக்களின் மன உளைச்சல்களையும் அவலங்களின் எதிரொலிகளையும் இன்றுவரை அவை எதிரொலிப்பதை அறியாதவர் போல், விடுதலைப்புலிகள் முடிந்து விட்டமையால் மேலொன்றும் இல்லை என்ற மனப்போக்கை வெளிப்படுத்துகிறார். ஆகவே, அவரும் தமிழ் மக்களை நாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்குப் பங்காளிகளாக வரும்படி கேட்டு, நீங்கள் சேர்ந்து செயல்படாவிட்டால் நாட்டில் மற்ற பகுதிகள், நீங்கள் அவர்களுக்கு எதிரானவர்களாகத்தான் பார்ப்பார்கள் என்கிறார்.

அநுராவின் ஜனாதிபதித் தேர்தல் கால பேச்சுக்களில், புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று பங்காளிகளான எல்லோருடனும் கலந்து உருவாக்கப்படும் வரை அரசமைப்புச் சட்டத்தில் உள்ள 13 ஆம் திருத்தத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவோம் எனப் பொது மேடைகளில் அறிவித்தாலும், நாடாளுமன்றத் தேர்தல் மேடைகளில் யாழ்ப்பாணத்தில் பேசிய போது "நாங்கள் இங்கு உங்கள் வாக்குகளுக்காக வரவில்லை. நாங்கள் இங்கு வந்து உங்களுக்கு 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துகிறோம், அதற்கு கைமாறாக உங்கள் வாக்குகளை தாருங்கள் எனக் கேட்கவில்லை. சமஷ்டி ஆட்சியை உங்களுக்குத் தருவேன் என்று சொல்லவும் நான் வரவில்லை. அப்படிச் சொன்னால் நீங்கள் வாக்குகளை தருவீர்கள் என்று எண்ணவும் இல்லை. நான் இங்கு வந்தது நாடு இன்று இருக்கும் நிலையில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து அதனை எப்படி மீட்டெடுக்கலாம் என உங்களோடு கலந்து பேசுவதற்காகவே" – என்று கருத்துத் தெரிவித்தார்.

பின் உள்ளூராட்சி சபை தேர்தலில் வடக்கு, கிழக்கை உள்ளடக்கி பொதுவாக நாட்டிலேயே வாக்குச்சரிவை சந்தித்த நிலையில், எந்த ஒரு உள்ளூராட்சி சபையிலும் தங்களுக்கு அதிக ஆசனங்கள் கிடைக்கும் சபையில் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும், தெரிவு செய்யப்பட்ட மற்ற அங்கத்தினர் ஜனநாயக முறையில் தங்களையே சபையை அமைக்க விட வேண்டும் என்று கருத்து தெரிவித்து, இல்லாவிடில் தனது ஜனாதிபதி அதிகாரங்களையும் நாடாளுமன்ற பெரும்பான்மையையும் பாவித்து புதிய சட்டங்களை தமது கட்சிதான் சபையில் ஆட்சி அமைக்குமாறு மாற்றுவோம் என்று சொல்ல, கட்சியின் இன்னும் ஒரு தலைவர் அப்படியாக நாங்கள் ஆட்சி பெறாத சபைகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு கிடைக்காது என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கருத்தாக்கத்துக்கு பொதுஜன பெரமுனவில் நாமல் ராஜபக்ஷ சபைகளில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுள்ள தரப்பினரை அடிப்படையாகக்

தொடர்ச்சி▼



ஜே.ஆரின் கண்டி யாத்திரை

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



யாழ்ப்பாணத்தில் அநுரகுமார

தொடர்ச்சி▲

கொண்டு ஆட்சி அமைக்கப்பட வேண்டும், அது போல எதிர்க்கட்சிகள் பலமாக உள்ள சபைகளிலும் அவர்களுக்கு ஆதரவு தரப்படும் எனவும், பயத்தால் தாங்கள் அரசியல் செய்பவர்கள் அல்லர், அதனை ஜனாதிபதி அநுராவும் அறிவார், 2005ஆம் ஆண்டிலிருந்து அவர் தனது தந்தையார் மஹிந்தவுடன் பணியாற்றி இருக்கிறார், அவரைப் பற்றியும் நன்கு அறிவார் என தெரிவித்துள்ளார். 'பாம்பின் கால் பாம்பறியும்.' தமிழ் பகுதிகளில் தேசியத்துக்கு எழும் துணிவும், வைராக்கியமும் அடக்கப்பட வேண்டுமானால், அதிகாரங்களைத் தக்க வைக்க வாக்குகளுக்காக சந்தர்ப்பவாதங்களும் தேவைகளும் தமிழர் கோரிக்கைகளுக்கு எதிராக ஒன்று திரளலாம்.

இந்தக் கட்டுரை தொடர்கின்ற பத்திரிகையின் 17 ஆம் திகதிய பதிவில் 'எதேச்சாதிகாரத்தை நோக்கி.....!' என்ற தலைப்பில் உள்ள ஆசிரிய தலையங்கத்தில் –

“.......உள்ளூராட்சி சபைகளில் ஐம்பது வீதத்துக்கு மேல் அல்லது அறுதி பெரும்பான்மைக்கு மேல் ஆசனங்களைப் பெறாத சபைகளில், மக்கள் ஆணை தங்கள் பக்கம் என்று ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை ஜனநாயக முறைமையையே கேலிக்கூத்தாக்கும் வேலையாகும்......

“இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி ஜனநாயகம் என்பது அட்சரகணித எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்ததுதான். அந்த எண்ணிக்கை எதிரணி பக்கம் சாயுமானால், மக்கள் ஆணை அவர்கள் பக்கம் என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயக விழுமியத்தின் கீழ் அதுதான் முழுமையான ஒழுங்கு.

“சபைகளில் தனித்து அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களை பெற்றுக் கொள்வது மாத்திரம் மக்கள் ஆணையாகி விடாது என்பது பழுத்த அரசியல்வாதியான அவருக்குத் தெரியாததல்ல. சபையை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான அறுதிப் பெரும்பான்மையை தமது கட்சி அல்லது கூட்டு பெறாத வரை அந்த சபையின் ஆணை மக்களால் தங்களுக்கு தரப்பட்டிருப்பதாக ஜனாதிபதி கோருவது பொய் – பித்தலாட்டம் – ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைக்கும் அரசியல் தந்திர விளையாட்டுமாகும்.

இவ்விடயத்தில் ஜனநாயகம், அதன் விழுமியங்கள், அதன் உரிமைகள், அதன் அடிப்படைகள் போன்றவை தெரியாத அப்பாவி போல ஜனாதிபதி கதை பேசக்கூடாது.” – என்று ஆசிரியர் குறிக்கிறார்.

ஜனநாயகத்தின் விழுமியங்கள் அட்சர கணித எண்ணிக்கையில் மாத்திரம் பார்க்கப்படுபவை அல்ல. ஒரு நாட்டிலோ, சபைகளிலோ உள்ள சிறுபான்மை மக்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள், நடத்தப்பட வேண்டும் என்பதில்தான் அங்கு ஜனநாயகத்தின் பிரதிபலிப்பு கணிக்கப்படும். ஜனநாயகத்தைப் பற்றி 19 ஜுலை 1956இல் நாடாளுமன்றத்தில் அடங்காத் தமிழர் முன்னணியின் தலைவர் சுந்தரலிங்கம் ஜே. ஆருக்கும் சி.பி.டி.சில்வாவுடன் இருந்த தர்க்கத்தில் இப்படிப் பதிந்தார்:–

“ஜனநாயகம் என்பது ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் அங்கு உள்ளவர்களின் தலைகளை எண்ணுவதை குறிக்கும். அதே சமயம் அந்த வரம்பின் எல்லைகளை மீறினால் மண்டைகள் உடைக்கப்படுவதையும் உள்ளடக்கும்” – என்றார். இந்தச் சம்பவத்தின் பின்னணியை எனது முன்னைய கட்டுரைகளில் பதிந்துள்ளேன். அதே தலைப்பில் சுந்தரலிங்கத்தின் பேரன் நன்கு வரவேற்புக்குள்ளான நாடகத்தை சர்வதேச அரங்குகளில் சென்ற வருடம் மேடை ஏற்றினார்.

திரும்பத் திரும்ப மக்கள் மனங்களில் எழுவது ஜே.வி.பியைத் தனது குழுமத்தில் பெரும்பான்மையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி புரையோடிப் போய் உள்ள இந்த இனப் பிரச்சினைக்கு எந்தவித கொள்கைகளில், எப்படியாக அணுக முற்படும் என்பதே. ஏனெனில் அவை பற்றி அவர்களது விஞ்ஞானம் எதையும் தெளிவாகக் கூறவில்லை.

(தொடரும்)



- எருவிலான் ஜேடி -

# முள்ளிவாய்க்கால் பேரழிவு ஒரு வரலாற்றுப் பேரவலம்

ஈழத்தமிழர் மட்டுமன்றி உலகத் தமிழர்களினுடைய உள்ளத்திலிருந்தும் அழிக்க முடியாத நாள் மே 18. 2009 மே 18, முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நடந்த சம்பவங்கள் ஈழத் தமிழரின் வரலாற்றில் நிறைவற்ற காயமாகும். இந்த நாள் ஒரு வரலாற்றுப் பீடிகை. தமிழரின் கடுமையான போராட்டத்தின் இறுதி அத்தியாயம் மட்டுமல்ல, உயிரிழப்புகளால் உண்டான ஆழமான வேதனையின் சின்னமாகவும் உள்ளது. முள்ளிவாய்க்கால் என்பது ஒரு இடம் மட்டுமல்ல, அது ஓர் இனத்தின் துயர், ஒரு சமூகத்தின் வலி, மறக்க முடியாத நினைவுகளின் தொகுப்பு.

ஈழத்திலே கடந்த 35 வருடங்களாக தமிழர் வெளியேற்றங்கள், இனக்கலவரங்கள், இராணுவ நெருக்கடிகள், கல்வி தரப்படுத்தல்கள் போன்ற முக்கிய வரலாற்று அம்சங்களில் தமிழரின் அவலங்களை எம்மால் அவதானிக்க முடிகின்றது. தமிழின அழிப்பு என்பது 1956 ஆம் ஆண்டு தனி சிங்கள மொழி சட்டத்தின் தொடக்கப் புள்ளியாக தோன்றி, யாழ் பொது நூலக எரிப்பு, முள்ளிவாய்காலில் நின்று, உயிர்த்த ஞாயிறு கிறிஸ்தவ தமிழின படுகொலை என கட்டமைக்கப்பட்ட வகையில் தமிழின அழிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது.

இவ்வாறு தொடர்ந்து தமிழின அழிப்பு என்பது ஈழத்திலே மேற்கொள்ளப்பட்டு வருவதனை நாம் காணலாம். தமிழின அழிப்பின் நோக்கம், தமிழ் மொழி பேசும் மக்களது உயிர்கள், தமிழர்களின் மொழி, நிலம், பண்பாடு, அடையாளம், அவர்களின் உரிமை, சுதந்திரம் போன்ற அத்தனை தனித்துவமான அடையாளங்களையும் அழிப்பதே ஆகும். இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வந்த இன அழிப்பின் உச்சக்கட்டம் 2009 மே 18 நடந்தேறியது.

கிழக்கிலே ஆரம்பமாகிய இராணுவ நடவடிக்கையானது வடக்கு வரை சென்று பல உயிர்ச்சேதம், உடமைச்சேதத்தை ஏற்படுத்தி இறுதியாக முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. முள்ளிவாய்கால் சம்பவமானது 2006 ஆம் ஆண்டு ஜ/லை மாதம் 14 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் திருகோணாமலை மாவிலாற்றிலே ஆரம்பமாகியது. இவ்வாறு மூண்ட யுத்தத்தின் காரணமாக வெருகல், மூதூர், கிளிவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சம்பூருக்கு இடம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்து சம்பூரில் வாழ்ந்ததை அறிந்து கொண்ட இராணுவம், 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி சம்பூரை நோக்கி படையெடுத்தது. இதனால் இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் வாகரைப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்து சென்ற அப்பாவி மக்கள் மீது அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் தாக்குதலை மேற்கொண்டது. அதன் காரணமாக பல உயிர்கள் பலியாகின. அத்தோடு பலர் காயமடைந்தனர். ஏனையோர் மட்டக்களப்பு பகுதிகளில் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

இவ்வாறு வாகரைப் பிரதேசத்தை கைப்பற்றிக் கொண்ட இராணுவம், 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் படுவான்கரை பகுதிகளுக்கு தமது படைகளை நகர்த்தி, அப்பிரதேச மக்கள் மீது எறிகணை தாக்குதலை மேற்கொண்டது. இதனால் படுவான்கரை பிரதேச மக்கள் எழுவான்கரைப் பகுதிகளுக்கு புலம்பெயர்ந்தனர். இங்கு மூன்று மாதங்களாக அகதி வாழ்க்கை வாழ்ந்து மிகவும் சிரமப்பட்டனர். அதன்பின்னர் படிப்படியாக இராணுவமானது வட மாகாணத்தை நோக்கி தமது படைகளை நகர்த்த ஆரம்பித்தது. வடமாகாணத்திலும் குறிப்பாக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தமது படைகளை நகர்த்திய இராணுவமானது அங்குள்ள பிரதேசங்களை தன்வசப்படுத்தியதோடு, அங்கும் தமது போர் நடவடிக்கையினை ஆரம்பித்தது. இதனால் இங்கு வாழ்ந்த மக்கள் முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்ந்தனர்.

தொடர்ச்சி▼

# முள்ளிவாய்க்கால் பேரழிவு ஒரு வரலாற்றுப் பேரவலம்



தொடர்ச்சி▲

இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி கட்டமைக்கப்பட்ட ஒரு திட்டத்தினை மேற்கொண்டது. விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்தத்தில் இலங்கை அரசு விலகிக் கொண்டது என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு, தனது கட்டமைக்கப்பட்ட இறுதி முள்ளிவாய்க்கால் இன அழிப்பிற்கான முதல் அடியினை எடுத்துவைத்தது. இவ்வாறு அறிக்கையை வெளியிட்டுவிட்டு, பதினைந்திற்கு மேற்பட்ட வெளிநாடுகளின் உதவியுடன் விமானத்தாக்குதலை மேற்கொண்டது. முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை நோக்கி இராணுவமானது மெல்ல மெல்ல தனது படைகளை நகர்த்திக் கொண்டு அங்கு தனது இரத்த தாகத்தை தீர்த்துக் கொண்டது. 2009 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்ட விதத்தில் தமிழின அழிப்பினை மேற்கொண்டது. இதனால் அங்கு 40,000 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு சூழ்ச்சி செய்து அப்பாவி மக்களை துரும்பாகப் பயன்படுத்தி, தனது படைகளை முள்ளிவாய்க்கலை நோக்கி நகர்ந்த இராணுவ நடவடிக்கையானது, மாபெரும் இறுதிக்கட்ட தமிழின அழிப்பினை மேற்கொண்டது. கூடிக்குலாவி, ஆடிப்பாடி சுற்றித் திரிந்த மக்கள் மத்தியில், மரண ஓலங்கள் காதைக் கிழித்தது. எங்கு பார்த்தாலும் அழும் குரல்களும், துப்பாக்கி சத்தங்களும், எறிகணைகள் எத்திசையும் கேட்கலாயிற்று.

மனித உரிமை சாசனமானது ஓர் போர் இடம்பெறும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படாமல், அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் இந்த அடிப்படை கொள்கையை மீறி அப்பாவி மக்களை பாதுகாப்பதிற்குப் பதிலாக அவர்களை கொன்று குவித்தது. அதுமட்டுமன்றி, போருக்கு என சில மரபுகளும், நிபந்தனைனகளும் காணப்படுகின்றன. ஆனால் இத்தகைய மரபுகளை மீறி தமிழினம் அழிக்கப்பட்டது. போர் செய்யும் போது வெள்ளைக் கொடியுடன் தஞ்சமடைய வருபவர்களுக்கு எதிராக எந்த தாக்குதல்களையும் மேற்கொள்ளக் கூடாது என்று போர் மரபு கூறுகின்றது. ஆனால் இந்த மரபினை மீறி பல உயிர்களை இராணுவம் கொன்று குவித்தது.

மேலும், போர் ஒன்று நடைபெறும் போது வைத்தியசாலைகள், பாடசாலைகள், மதவழிபாட்டு ஸ்தலங்கள் எவ்விதத்திலும் தாக்கப்படக் கூடாது என்று போர் மரபு கூறுகின்றது. ஆனால் அவ்வாறு இராணுவமானது நடந்து கொள்ளவில்லை. மாறாக வைத்தியசாலைகளில் தஞ்சமடைந்தவர்களின் மீதும் குண்டு மழையைப் பொழிந்து பல உயிர்களை காவு கொண்டது. முள்ளிவாய்க்கால் பகுதியில் போர் நடந்து கொண்டிருந்த போது பாலியல் வன்கொடுமைகளும், படுகொலைகளும் மிக மோசமான முறையில் இடம்பெற்றன எனக் கூறப்படுகின்றது. உறவுகளையும் உடமைகளையும் இழந்து, உடல் பாகங்களையும் இழந்து அங்கவீனராக நடைப் பிணம் போல் சொந்த நாட்டில் அகதிகளாகவும், வெளிநாடுகளில் நாடோடிகளாகவும் வாழ்ந்து கொண்டு வருகின்ற தமிழர்களின் அவலத்தினைச் சொல்லும் போது கண்களில் கண்ணீர் பாய்கின்றது. இவ்வாறு அவர்கள் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டதன் நோக்கம், வெறுமனே விடுதலைப் புலிகளை வீழ்த்துவதல்ல. அவர்களின் ஒரே ஒரு குறிக்கோள் தமிழினத்தை முற்றாக அழிப்பதாகும்.

இவ்வாறு கிழக்கில் 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி மாவிலாற்றில் ஆரம்பமாகி, 2009 மே 18 வரையான காலப்பகுதிக்குள் சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் சிங்கள இனவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அந்தளவிற்கு மிக மோசமான இன அழிப்பினை பேரினவாதிகள் மேற்கொண்டுள்ளனர்.

இறுதியாக நடந்த முள்ளிவாய்க்கால் போரில், போர் மரபுகளையும் மீறி மிலேச்சத்தனமான முறையில் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் அனைத்தும் இருந்தும், தமிழினத்திற்கு நீதி கிடைக்காத நிலை காணப்படுகின்றது. பேரின மேலாதிக்க இராணு

தொடர்ச்சி▼



# முள்ளிவாய்க்கால் பேரழிவு ஒரு வரலாற்றுப் பேரவலம்

தொடர்ச்சி▲

வம் மிக கொடூரமான முறையில் போர் குற்றங்கள் புரிந்துள்ளது என்பது தெரிந்தும் எந்தவிதமான விசாரணையுமின்றி பேரினவாதிகள் உலாவுகின்றனர். தமிழினத்தின் உரிமை குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. எம்மினத்தின் இரத்தம் ஆறாய் பாய்ந்து ஓடி அடங்கிய முள்ளிவாய்க்கால் மண்ணில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம். முள்ளிவாய்க்கால் நினைவு நாள், அந்த பீடிகையை நினைவுகூரும் தினமாகும். எதிர்காலத்தில் இனவழிப்பு, வன்முறை போன்ற விஷயங்களை நம்பாமல் ஒரு சமாதான சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற உறுதியையும் விழிப்புணர்வையும் வளர்க்கும் நாள். இந்த நினைவு நாளில் நாம் மனித நேயம், சகிப்புத்தன்மை மற்றும் சமாதானத்தின் மிகப்பெரும் தேவையை உணர்ந்து, அதற்காக செயல்பட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் ஒரு வரலாற்றுப் பீடிகையாக நம் முன் நிற்கிறது. அதை மறக்காமல், அந்தப் பாடங்களைக் கற்றுக்கொண்டு, இனி இனவழிப் பிரிவு இல்லாத, வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்க நம்மை நாம் உறுதிப்படுத்த வேண்டும். நாளைய தலைமுறைகள், இந்த வரலாற்றுப் பீடிகையை மனதில் வைத்து சமாதானத்துக்கான புதிய வழிகளைத் தேடி, மனித நேயம் நிறைந்த உலகத்தை கட்டியெழுப்பவேண்டும்.

முள்ளிவாய்க்கால் என்பது கண்ணீர், வேதனை, வலிகள் நிறைந்த வரலாற்றுப் பீடிகை. இந்த வரலாறு நம்மை எப்போதும் நினைவூட்டும். இனி ஒருபோதும் இத்தகைய போர்வெறிகள், உயிரிழப்புகள் நிகழக்கூடாது என்பதில் உறுதியை வலியுறுத்தும். நாம் அனைவரும் மனித நேயம், சகிப்புத்தன்மை, சமாதானத்தின் தெய்வீகப் பணியில் முனைந்துவாழ வேண்டும். அது தான் முள்ளிவாய்க்கால் நினைவு நாளின் உண்மையான அர்த்தம்.






# முள்ளிவாய்க்காலுக்கான பொறுப்பும் கனேடிய நினைவுச் சின்னமும்!



புருஜோத்தமன் தங்கமயில்

சுதந்திரத்துக்கான பெருந்தீயை நெஞ்சிலேற்றி தாயகத்துக்கான தாகத்தோடு நீண்ட பல தசாப்த காலமாக போராடிய தமிழினத்தின் மீது தென் இலங்கையின் பேரினவாத அரசும், பிராந்திய வல்லரசு(கள்) உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் இணைந்து இன அழிப்பின் உச்சப் போரை நடத்திய நாள்களின் நினைவேந்தல் காலம் இது. ஆம், நாம் முள்ளிவாய்க்கால் பேரழிவுகளை எதிர்கொண்டு பதினாறு ஆண்டுகளாகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திலும், வீடுகளிலும், தமிழர் தாயகம் பூராவும், புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்கள் பலிவாங்கப்பட்ட உறவுகளை நெஞ்சுருகி அஞ்சலி செலுத்துவார்கள். இந்த அஞ்சலி நாட்கள் மாண்டுவிட்ட ஆன்மாக்களின் அமைதிக்கான பிரார்த்தனைகளோடு மாத்திரம் கடந்து செல்லப்பட வேண்டியவையல்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தை ஒரு சம்பிரதாயபூர்வ நிகழ்வாக எண்ணிக் கடப்போம் என்றால், எஞ்சியிருக்கும் தமிழ் மக்கள் தங்களின் பொறுப்புக்களை மறந்த சுயநலக்காரர்களாக மாத்திரம் வரலாற்றில் அடையாளம் பெறுவார்கள். அஞ்சலி என்பது கொடுங்கரங்களினால் கொல்லப்பட்டவர்கள் மற்றும் சிதைக்கப்பட்டு குற்றுயிரோடு எஞ்சியிருக்கும் உறவுகளுக்கான நீதியை பெற்றுக் கொடுக்கும் கடப்பாடுகளைக் கோருவதாகும். முள்ளிவாய்க்கால் முற்றத்தில் முழந்தாழிட்டு அஞ்சலிப்பதற்கு முன்னர், தமிழினத்தின் மீது நடத்தப்படும் ஆக்கிரமிப்பு வேட்டைகளை தொடர்ந்தும் எதிர்த்துப் போராடுவோம் என்கிற உறுதியையும் எடுத்துக் கொள்வதில் இருந்து, தமிழின அரசியல் அடுத்த கட்டங்களை நோக்கி நகர வேண்டும். மாறாக, பருவகால நிகழ்வுகளில் ஒன்றாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையும், சிரட்டைக் கஞ்சி பருகுதல் காட்சிகளையும் முன்னிறுத்தி கடப்போமாக இருந்தால், தமிழினத்தின் தொடர் பேரழிவை தடுக்கவே முடியாது.

தொடர்ச்சி▼



# முள்ளிவாய்க்காலுக்கான பொறுப்பும் கனேடிய நினைவுச் சின்னமும்!

தொடர்ச்சி▲

தென் இலங்கையில் அரசாங்கங்கள் அடிக்கடி மாறுவதுண்டு. ஆனால், பேரினவாத சிந்தனையுள்ள அரசு இயந்திரம் எந்த மாற்றத்தையும் ஒருபோதும் கண்டதில்லை. அது, தமிழ் மக்களின் மீதான ஆக்கிரமிப்பு என்ற குறிக்கோளோடு மாத்திரம் இயங்கிக் கொண்டிருப்பது. அது,இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியப் பிராந்தியங்களின் தென் இலங்கை மீதான படையெடுப்புக்களின் பிரகாரம் எழுந்த மனச் சிக்கலின் தொடர்ச்சியாகும். இந்த மனச்சிக்கலை தென் இலங்கை ஒருபோதும் கடந்து வந்தது இல்லை. அதுவும், சுதந்திர இலங்கையில் 72 வீதத்துக்கும் அதிகமான ஆள்பலத்தைக் கொண்டிருந்த போதும், கடந்த காலத்தில் தாங்கள் எதிர்கொண்ட அடக்குமுறை மனச்சிக்கலை, தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பாக நிகழ்த்தி ஆசுவாசப்படும் மனநிலையில் இருக்கிறார்கள். இது, அடிப்படையில் மன ஆறுதல் – தெளிவூட்டல் நிகழ்வுகளினால் கடக்கப்பட வேண்டியது. ஆனால், தென் இலங்கையின் சமூகக் கட்டமைப்புக்கள் பெரும்பாலும் விகாரைகளின் போதனை கூடங்களில் இருந்து ஆரம்பிப்பதால், அங்கு தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு எதிரான உணர்வு ஊற்றி வளர்க்கப்படுகின்றது. அதற்கு தென் இலங்கையின் எந்தவித அரசியல் சக்திகளும் புலமைத்தரப்பும் விதிவிலக்கல்ல. இடதுசாரியம், சோசலிசம், லிபரலிசம் என்று தங்களின் அரசியல் – சமூக நிலைப்பாடுகளை பேசினாலும், அதன் அடிப்படையாக பௌத்த பேரினவாத சிந்தனைகளை வைத்துக் கொண்டுதான் இயங்குகிறார்கள். அதனால்தான், புரட்சி மாற்றக் கோசங்களோடு ஆட்சிக்கு வரும் தரப்புக்களும், எந்தவித குற்றவுணர்வும் இன்றி, தென் இலங்கை அரச இயந்திரக் கட்டமைப்புக்குள் தங்களை புகுத்திக் கொண்டுவிடுகின்றன. தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் மேடைகளில் “புதிய புரட்சி மாற்றம்“ என்று கோசமிட்டு ஆட்சியைப் பிடித்துவிட்டபோதிலும், அவர்களின் இயக்கம் என்பது சேனநாயக்காக்கள், பண்டாரநாயக்காக்கள், ஜெயவர்த்தன, ராஜபக்‌ஷக்களின் பாதையை பின்தொடர்வதாகவே இருக்கின்றது. இல்லையென்றால், தமிழ் மக்கள்

தொடர்ச்சி▼





# முள்ளிவாய்க்காலுக்கான பொறுப்பும் கனேடிய நினைவுச் சின்னமும்!

தொடர்ச்சி▲

மீது இன அழிப்பு நிகழ்த்தப்பட்டது என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிராகரித்திருக்காது. தேசிய மக்கள் சக்தி என்பது, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்கிற முகமூடி அணிந்த ஓநாய் என்பது வெளிப்படையானதுதான். ஆட்சிக்கு வந்து சில மாதங்களுக்குள்ளேயே, தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பினையும் அடக்குமுறையையும் எந்தவித தொய்வும் இன்றி செய்வதிலிருந்து அதனை புரிந்து கொள்ள முடியும். தமிழரின் பாரம்பரிய வழிபாட்டுத்தலங்கள் மீதான அச்சுறுத்தல்கள், 6000 ஏக்கர் அளவிலான காணி அபகரிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகம் என்று தமிழர்களை அடக்கி ஒடுக்கும் தென் இலங்கையின் கொடுங்கரங்கள் இன்றும் நீளவே செய்கின்றன. அப்படியான நிலையில், தமிழ் மக்கள் யார் ஆட்சிக்கு வந்தாலும் அமைதியடைந்து விட முடியாது. எப்போதுமே விழிப்புடன் இருந்தாக வேண்டும். இல்லையென்றால், எல்லாவற்றையும் ஆக்கிரமித்து அழித்துவிடுவார்கள். இப்படியான பேரினவாத சிந்தனைகளை எதிர்கொண்டுதான், தமிழ் மக்கள் தங்களை இந்த நாட்டில் நிலை நிறுத்தியாக வேண்டும். இந்தப் புரிதலை ஒவ்வொரு தமிழ் மகனும் மகளும் தம்முள் பேருணர்வாக ஏந்திக் கொள்ள வேண்டும்.

**கனடா முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்**

கனடாவின் பிரம்டன் நகரில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையில் நிகழ்த்தப்பட்டது இன அழிப்பு என்பதை எடுத்துச் சொல்லும் முகமாக அந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த நினைவுச் சின்னம் ராஜபக்ஷக்களை எரிச்சலூட்டியிருக்கின்றது. முதன்முதலாக ராஜபக்ஷக்களை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களும் தற்போது ஆட்சி நடத்துபவர்களுமான ஜே.வி.பியினரும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவுச் சின்னம் தொடர்பில் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, வெளிவிவகார அமைச்சரான விஜித ஹேரத், கொழும்பிலுள்ள கனேடிய தூதுவரை அழைத்து, இலங்கை அரசின் எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார். அத்தோடு, இலங்கையில் இன அழிப்பு என்பதே நடைபெறவில்லை என்று அறிவித்திருக்கிறார். ஆனால், முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவுச் சின்னத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பிரம்டன் நகர முதல்வரான பட்ரிக் ப்ரவுண், இலங்கையின் தமிழ் மக்கள் இன அழிப்புக்கு உள்ளானார்கள் என்பதை ஒருபோதும் நிராகரிக்க முடியாது என்று மீண்டும் உறுதிபட பதிலளித்திருக்கிறார். உள்நாட்டில் ஒரு முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அமைக்க முடியாது அல்லாடும் தமிழ் மக்களுக்கு கனடாவில் அமைந்துள்ள நினைவுச் சின்னம் ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதுதான். அதுவும், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திலே அமைக்கப்பட்டிருக்கும் அஞ்சலிக்கான கரங்கள் பல தடவை, இலங்கை அரச படைகளினால் உடைத்தழிக்கப்பட்டிருக்கின்றன. ஏன், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியே இடித்தழிக்கப்பட்டது. பின்னராக, நீண்ட அழுத்தங்களின் பின்னர், அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல் ஒரு தூபியை அமைத்துவிட்டு, நினைவுத் தூபி என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படியான அடக்குமுறைகளைச் சந்திக்கும் போது, அடக்குமுறைகள் இல்லாமல் இருக்கும் புலம்பெயர் தேசத்திலுள்ள தமிழ் உறவுகள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சின்னங்களை தங்களின் பிரதேசங்களில் அமைத்து, முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்டது இன அழிப்பு என்று திரும்பத் திரும்ப சர்வதேசத்திடம் உரைக்கும் அளவுக்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். ஆனால், அப்படியான நினைவுச் சின்னங்களை முன்னிறுத்திக் கொண்டு குழுநிலை அரசியல், நான் பெரிது நீ பெரிது என்கிற குழாயடி சண்டைகள் நிகழ்த்தப்படுவது தமிழர் அரசியலின் சாபக் கேடாகும்.

நாசி ஜேர்மனியாலும் அதன் துணைத் தரப்புக்களினாலும் சுமார் அறுபது இலட்சம் யூத மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். திட்டமிட்ட ரீதியில் அடையாளம் காணப்பட்டு யூதர்களை அழித்தொழிக்கும் வேலைகளை ஹிட்லரின் அரசு இயந்திரம் செய்தது. அந்தப் இன அழிப்பில் இருந்து யூதர்கள் மீண்டெழுந்தார்கள். உலகம் பூராவும் உயிர் பிழைத்தலுக்காக சிதறுண்டு கிடந்த யூதர்கள், இஸ்ரேல் என்கிற நாட்டினை அரபு தேசத்துக்குள் திட்டமிட்டுக் கட்டியெழுப்பினார்கள். தாங்கள் இந்த உலகத்தினால் இன அழிப்புச் செய்யப்பட்டவர்கள், அதிலிருந்து மீண்டெழுவதற்கு தாங்கள் ஒன்றிணைந்து தங்களின் தேசத்தை கட்டியெழுப்புவதுதான் ஒரே வழி என்ற நிலைப்பாட்டில் நின்றார்கள். அதற்காக, ஐரோப்பாவிலும், அரபு நாடுகளிலும், அமெரிக்காவிலும் இருந்த யூதர்கள் இஸ்ரேலை நோக்கி வந்தார்கள். ஒருங்கிணைந்தார்கள். ஏன், ஆபிரிக்காவின் எத்தியோப்பாவில் இருந்த கறுப்பின யூதர்களைக் கூட இராஜதந்திர நடவடிக்கைகள் ஊடாக இஸ்ரேலுக்குள் அழைத்துக் கொண்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னால், தங்களிடம் இருந்து பறிக்கப்பட்டதாக கூறி, அவர்கள் பலத்தீன மக்களின் நிலங்களை திட்டமிட்டு ஆக்கிரமித்து

தொடர்ச்சி▼



# முள்ளிவாய்க்காலுக்கான பொறுப்பும் கனேடிய நினைவுச் சின்னமும்!

தொடர்ச்சி▲

இஸ்ரேலைக் கட்டினார்கள். அவர்கள், தங்களின் மீதான இன அழிப்பு நினைவுச் சின்னங்களை ஜேர்மனி, இஸ்ரேல், அமெரிக்கா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா உள்ளிட்ட பல நாடுகளில் நிறுவியிருக்கிறார்கள். அல்லது நிறுவச் செய்திருக்கிறார்கள். அதன்மூலம், உலகத்தை நோக்கி தங்களின் மீதான அடக்குமுறைக்கான குற்றவுணர்ச்சியை நாளும் பொழுதும் எழுப்புகின்றார்கள். தங்களுக்கான நீதி இன்னமும் வழங்கப்படவில்லை என்ற தோரணையில் நின்று, இஸ்ரேலின் ஆட்சிக் கட்டமைப்பை முன் நகர்த்துகிறார்கள். இன்றைக்கு இஸ்ரேல், காசாவில் நிகழ்த்திக் கொண்டிருப்பது, இன அழிப்பு போர். வைத்தியசாலைகள் தொடங்கி முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் எப்படியெல்லாம் இலக்கு வைத்து அழிக்கப்பட்டார்களோ, அப்படித்தான் காசா மக்களை இஸ்ரேல் அழித்தொழிக்கின்றது. தாங்கள் சந்தித்த இன அழிப்பை உலகம் வேடிக்கை பார்த்தது, ஆகவே தாங்கள் எவ்வளவு இன அழிப்பையும் நிகழ்த்துவதற்கான அருகதையுடைவர்கள் எனும் தோரணையில் இஸ்ரேல் செயற்படுகின்றது.

தமிழர்களில் ஒரு குறிப்பிட்டளவான தரப்பினர், தங்களை யூதர்களோடு ஒப்பிடுவார்கள். அதன் மூலம், தங்களின் மீள் எழுச்சி தொடர்பில் ஒரு நம்பிக்கையை வெளிப்படுத்துவார்கள். ஆனால், யூதர்கள் எப்படி தங்களை ஒருங்கிணைத்தார்கள் என்கிற புரிதலை தமிழ் மக்கள் ஒருபோதும் பெற்றுக் கொண்டதில்லை. தேசமற்று இருந்தவர்கள், பலத்தீனத்தை ஆக்கிரமித்து புதிய நாட்டைக் கட்டினார்கள். ஆனால், தமிழ் மக்களோ, நாளும் பொழுதும் தேசத்தை இழக்கிறார்கள். தாயகத்தில் இருந்து நாளும் பொழுதும் புலம்பெயர்வு என்ற இன வெளியேற்ற அச்சுறுத்தல் நீடிக்கின்றது. அதனை தென் இலங்கை சாதகமாகப் பயன்படுத்தி, காணிகளை அபகரிக்கின்றது. இன்னொரு பக்கம், புலம்பெயர் தேசத்திலிருந்து தாயகத்துக்குள் வரும் பெரும் பணம், கோவில் கோபுரங்களுக்குள்ளும், சுற்று மதில்களுக்குள்ளும் கணிசமாக முடங்கிப் போகின்றது. யாருமற்ற ஊர்களில் கோயில்கள் மாத்திரம் புதிது புதிதாக முளைக்கின்றன. அழிக்கப்பட்ட ஓர் இனம் மீள் எழுவது என்பது, அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக மீண்டெழுவதாகும். ஆனால், தமிழ்ச் சூழலில் அதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. மாறாக, பிளவுகளும், குழுமைவாதமும் மேலோங்கிச் செல்கின்றன. தாயகத்தினை தாயாகக் கருதி, காப்பாற்றுவதற்கான எண்ணப்பாடுகளின் வழியே இயங்க வேண்டும். ஆனால், தென் இலங்கை, பிராந்திய வல்லரசுகள் அளவுக்கு புலம்பெயர் தேசத்தின் சில தரப்புக்களும் தாயகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி, சுயநலன்களை அடைவதில் ஆர்வம் காட்டுகின்றன. தமிழ்த் தேசிய அரசியல் தொடங்கி பிரதேச வாதம், சாதிய வாதம் வரை அவர்களின் தலையீடுகள் அதிகரித்திருக்கின்றன. பிறரிடம் இருந்து நல்லவற்றை எடுத்துக் கொண்டு முன்னேறுவதுதான் மீள் எழுச்சிக்கான அடிப்படை. அந்த வகையில், யூதர்களிடம் இருந்து ஒருங்கிணைவு, பொருளாதார வளத்தினைப் பெருக்குதல், தொழிநுட்ப அறிவு உள்ளிட்டவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். அந்தப் பாதையை நோக்கி, தாயகமும் புலம்பெயர் தேசங்களும் ஒரு புள்ளியின் நின்று இயங்க வேண்டும். இன்றைய, சர்வதேச இயக்கத்தில் தமிழ் மக்கள் ஒருபோதும் தனித்திருக்க முடியாது. அதனால், இணக்க சக்திகளை நாளும் பொழுதும் தேடிக் கொள்ள வேண்டும். அதற்கு, புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் மக்கள் முன்முயற்சியை எடுக்க வேண்டும். அதன் போக்கில், சர்வதேச ரீதியில் அழுத்தங்களை வழங்கும் அளவுக்கு முன்னேற வேண்டும். அப்போதுதான், நாம் அழிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டெழுந்து நின்று எம்மை நிரூபிக்க முடியும். அது, எமது உறவுகளுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகவும் இருக்கும்.




# முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழர்களைத் திரள யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் அழைப்பு

இனப்படுகொலை செய்யபட்ட எம் உறவுகளை நினைவுகூர் முள்ளிவாய்க்கால் மண்ணில் வடகிழக்கு வாழ் தமிழர்கள் தேசமாக திரள வேண்டும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தயாபரன் லகிர்தர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நினைவேந்தல் ஏற்பாடுகளில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

2009 ஆம் ஆண்டுஇறுதி யுத்தத்தில் இனப்படுகொலை செய்யபட்ட இந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் நாளைய தினம் (இன்று) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக வருகை தந்துள்ளோம்.

எமது இனம் இனப்படுகொலை செய்யபட்டு 16 ஆண்டுகள் நிறைவடைகின்றது .தமிழ் மக்களாக அனைத்து ஈழத் தமிழர்களுக்கும் வரலாற்று கடமை உள்ளது. எமது இந்த வரலாறு அடுத்த கட்ட சந்ததிக்கு கடத்தப்பட வேண்டும். சர்வதேச சமூகத்திற்கு தொடர்ச்சியாக எமது வலிகளையும் வடுக்களையும் தொடர்ந்து நாம் கூறவேண்டும்

அதனடிப்படையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெறவுள்ள உயிர் நீத்த எம் உறவுகளை நினைவு கூரும் நினைவேந்தலில் இளைஞர்களாக, யுவதிகளாக, தந்தையர்களாக, தாய்மார்களாக, உறவுகளாக, சமூக அமைப்புக்களாக, மாணவர்களாக தேசமாக முள்ளிவாய்க்கால் மண்ணிற்கு வடகிழக்கு தமிழர்கள் திரள வேண்டும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நாளில் களியாட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்து, எமது மண்ணில் எமது தாய் மொழியான தமிழ் மொழியை பேசினார்கள் என்பதற்காக ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற உணர்வுசார்ந்த நிலைபாட்டில் அனைவரும் திரள வேண்டும் ஆகவே முள்ளிவாய்க்கால் மண்ணில் அனைவருடைய வருகையும் அவசியமானது.

அது மட்டுமன்றி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அடுத்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பில் ஓர் அங்கமாக இணைந்து செயற்படும் . தொடர்ந்து மாணவர்களாக எமது நினைவேந்தல் சார் பணிகள் முன்னெடுக்கப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐந்து பல்ஸர் மோட்டர் சைக்கிள்களை திருடிய இளைஞர் வவுனியாவில் கைது

(கி.வசந்தன்)

பல்வேறு பகுதிகளில் 5 பல்ஸர் மோட்டர் சைக்கிள்களை திருடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இம் மாதம் வவுனியா, ஈரப்பெரியகுளம், மதவாச்சி, வவுனியா – முதலாம் குறுக்குத் தெரு, மதவாச்சி – அட்டவீரக்கொட, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் பல்ஸர் ரக மோட்டர் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயத்திலக தலைமையிலான பொலிஸ் குழு தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இதன்போது சிதம்பரபுர வீதி, ஈரப்பெரியகுளம் பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.



அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த 5 பல்ஸர் மோட்டர் சைக்கிள்களையும் திருடி விற்பனை செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து 5 பல்ஸர் மோட்டர் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கப்பலில் போதைப் பொருள் கடத்தி வந்தவரை 7 நாள்கள் பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி

(ந.லோகதயாளன்)

நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை வந்த பயணிகள் கப்பலில் போதைப் பொருள் கடத்தி வந்தவரை 7 நாளகள் பொலிஸாரின் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நாகபட்டினத்தில் இருந்து நேற்று முன்தினம் 16 ஆம் திகதி வருகைதந்த சென்னையை சேர்ந்த பயணி ஒருவர் 4 கிலோ குஷ் ரக போதைப் பொருளை சூட்சுமமாக உடமையில் மறைத்து எடுத்து வந்த போது சோதனையில் அதனை சுங்க அதகாரிகள் கைப்பற்றினர்.

போதைப்பொருளை கடத்தி வந்தவரை கைது செய்த சுங்கத் திணைக்களத்தினர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சந்தேக நபரை காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர் நேற்றைய தினம் நீதிவான் முன்பாக ஆஜர் செய்யப்பட்டபோது பொலிஸாரின் கோரிக்கையை ஏற்ற நீதிவான் சந்தேக நபரை 7 தினங்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி வழங்கினார்.






# திருகோணமலை சிவன் கோயிலடியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை சிவன்கோயிலடி முன்றிலில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி நேற்று மாலை வழங்கி வைக்கப்பட்டது.

கஞ்சி வழங்கும் நினைவேந்தல் நிகழ்வை திருகோணமலை மாவட்ட வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகள் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில், காணாமற்போனோரின் உறவுகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்தனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர்.









# ஜே.வி.பியின் சூழ்ச்சியில் இருந்து தமிழர்களை மீட்க தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைவது மிக அவசியம்!

## கீதநாத் காசிலிங்கம் கோரிக்கை



உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் நோக்குடன் வடக்கு, கிழக்கின் தமிழ்க் கட்சிகள் இணைவு தொடர்பாக திறந்த மனதுடன் சந்திப்புகளில் ஈடுபடுவது ஆரோக்கியமான அரசியலாக உள்ளது என சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகளின் இணைவு மற்றும் குறித்த கட்சிகளுக்கிடையிலான சந்திப்புகள் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ள நிலையில் இவ்விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், மாற்றம் எனும் கருத்தியலை முன்வைத்து ஆட்சியில் அமர்ந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கடந்த ஆறு மாதத்திற்கும் மேலான தமது ஆட்சிக் காலத்தில் பெயர் சொல்லும் வகையிலான எந்த அரசியல் மற்றும் அபிவிருத்தி நகர்வுகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இந்நிலையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு வடக்கு மக்கள் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். வடக்கு, கிழக்கின் பெரும்பான்மையான சபைகளில் அதிகளவு ஆசனங்களை கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களின் மன ஓட்டத்தை புரிந்துகொண்டு திறந்த மனதுடன் தமக்கிடையிலான இணைவு குறித்து கலந்துரையாடுவது ஆரோக்கியமான அரசியலாக உள்ளது.

நாட்டை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பின்னடைவை நோக்கி வழிநடத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொது எதிரியாக கொண்டு, அவர்களின் சூழ்ச்சி அரசியலில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க தமிழ்க் கட்சிகள் தமது இணைவை உறுதிப்படுத்த வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருக்கோவிலினதும் நாவிதன்வெளியினதும் வண்டில் சின்ன சுயேச்சை அணிகள் சந்திப்பு

## தமிழரசின் பதிலையடுத்து மாகாணசபை அணுகுமறை குறித்துத் தீர்மானம்



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபையில் ஆட்சியமைக்கும் வண்டில் சின்ன சுயேச்சைக் குழுவும், நாவிதன்வெளியில் இரண்டு ஆசனங்களை பெற்ற வண்டில் சின்ன சுயேச்சை குழுவும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டன .

இச் சந்திப்பு திருக்கோவிலிலுள்ள சுயேச்சைக் குழு தலைவர் சுந்தரலிங்கம் சசிகுமாரின் இல்லத்தில் வியாழனன்று நடைபெற்றது.

எதிர்கால அரசியல் செயற்பாடுகள், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், தொழில் துறைகள், எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுதல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.


கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முதலில் இலங்கை தமிழரசு கட்சியுடன் பேசுவதற்கு தயார் நிலையில் இருக்கின்றோம் என்பதில் இணக்கம் காணப்பட்டது.

அவர்களுடனான சந்திப்பின் பலாபலனைப் பொறுத்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றி விரிவாக கலந்துரையாடப்படும்.



தமிழரசுக் கட்சித்தலைமைப் பீடம் தமது சுயேச்சை அணியோடு எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து எதிர்கால திட்டங்கள் அமையும் என்று தலைவர் சு.சசிகுமார் தெரிவித்தார்.







# அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் திடீரெனப் பெருங்காற்றுடன் கடும் மழை

**(பாறுக் ஷிஹான்)**

கடும் காற்று காரணமாக அம்பாறை மாவட்டத்தில் நேற்று பல இடங்களிலும் மரங்கள் முறிந்து விழுந்தன. மக்கள் குடியிருப்புக்கள், வியாபார நிலையங்கள் என, பலதும் சேதமடைந்துள்ளமையோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

மேலும் கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை,பெரியநீலாவணை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று உள்ளிட்ட பகுதிகளில் திடீரெனக் கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களை கவனத்திற் கொண்டு செயற்படுமாறும், பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும், தற்போதைய காலநிலை மாற்றமானது சிறுவர் முதல் பெரியோர் வரை பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் எம்.றியாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடி திடீரென பலத்த காற்று மழை ஏற்பட காலநிலை மாற்றமே காரணமாகும். எல்–நினோவின் தாக்கம் இலங்கைக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதன் தாக்கம் காரணமாக இடையிடையே மழை ஏற்படுவதுடன் பாரிய காற்றும் 10 முதல் 20 நிமிடம் வரை நீடிக்கிறது. இது தவிர அதிக வெப்பம் நிலவுவதுடன் வழமையை விட இன்று மாத்திரம் பாரிய காற்று வீசியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.


குறிப்பிட்ட ஒரு நேர காலத்திற்குள் இவ்வாறான பாரிய காற்று இடையிடையே மழை வீழ்ச்சி என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக வயல்வெளிகளில் வேலை செய்வதை தவிர்த்துக் கொள்வது நல்லது. – என்றார் அவர்.

அத்துடன் வெப்பநிலை அதிகரிப்பினால் சிறுவர்கள் நீராகாரங்களை உட்கொள்கொள்ளுமாறும் வெளியே அநாவசியமாக நடமாடுவதை தவிர்க்குமாறும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வயல் வெளிகளில் நீண்ட நேரம் வயல்வேலைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.











# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை வெறும் சமயச் சடங்காக்கி விட்டோமா..?



வி.எஸ்.சிவகரன்

ஏழு தசாப்தத்திற்கு மேலாக இன விடுதலை அரசியலிலே பல்வேறு விதமான துயரங்களையும் இடர்களையும் எதிர்கொண்டு, வீறுகொண்டு எழுந்த தமிழினம் 2002 சமாதான ஒப்பந்தத்திற்கு பின்னர் ஆயுத ரீதியான வலிமையை இழக்க தொடங்கியது. அதன் முடிவு 2009 மே 18 முடிவுக்கு வந்தது.

எவருமே எதிர்பார்க்காத வகையில் ஓர் இனப்படுகொலையின் உச்ச தாண்டவத்தோடு நந்திக் கடலோரத்தில் விடுதலைப் போராட்டம் மௌனித்துப் போனது. வார்த்தைகளில் வடிக்க முடியாத வலிகள் அத்தனையும் சுமந்து, விடுதலை என்கின்ற உயரிய இலட்சிய கனவுக்காக தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்ட போதும், சொத்துக்கள் சூறையாடப்பட்ட போதும், விடுதலைக்காக காத்திருந்தனர்.

எல்லா இழப்புகளும் எந்த முடிவுமின்றி பொய்த்துப் போய்விட்ட ஒரு வெறுமைக்குள் 16 ஆண்டுகள் கடந்து போய்விட்டன.

திரும்பிப் பார்க்கையிலே நினைவுகள் மட்டும் நீசமற நெஞ்சைக் கணக்க வைக்கின்றன. உலகமே வியந்து பாரத்த விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் இப்படி ஒரு முடிவு வரும் என எவரும் எண்ணி இருக்காத சூழ்நிலையில் இந்த மரண அவல ஓலம் பன்னாட்டு அனுசரணையோடும் இந்தியாவின் வழித்துணையோடும் நடந்தறியது.

இந்த உலகம் ஒருபோதும் நீதியின் பக்கம் நிற்பதில்லை என்பதற்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை விட உயர்ந்த சாட்சியம் அவசியமில்லை. இன்று உலகத்தில் நடக்கக்கூடிய பல்வேறு விதமான யுத்தங்களிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகமும் அமெரிக்காவும் இதர வேறு சில நாடுகளும் தலையிடுகின்ற நிலை காணப்படுகிறது. அவை தமது அரசியல் நலன்களுக்காகவே. ஆனால் தமிழினத்தை எல்லோரும் சேர்ந்து – கூட்டுச் சேர்ந்து – அழிப்பதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அவர்களிடமே நீதி கோர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இந்த இனம் தள்ளப்பட்டு விட்டது என்பதே மிகப் பெரிய அவமானம்.

ஆனால், நீதி இல்லாத உலகத்திடம் நீதி கிடைக்குமா? 16 ஆண்டுகளாகியும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை. கையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு கூட இந்த உலகம் நீதி பெற்றுக் கொடுக்கவில்லை. யுத்தம் முடிந்து ஒரு சில நாள்களில் முள்ளிவாய்க்காலைப் பார்வையிட்ட அன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ முன் தந்த – தரப்பட்ட – வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறந்தன. ஐ.நாவின் நிபுணர் குழுவான தருஸ்மன் அறிக்கையில் முன்மொழியப்பட்ட விடயங்களும் இதுவரைக்கும் செயல்படுத்தப்படவில்லை . கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணை குழுவின் அறிக்கையிலும் சில நல்ல விடயங்கள் இருந்தன. அவையும் நடைமுறைக்கு வரவில்லை.

பரணகம ஆணைக் குழு விசாரணையும் பயனற்றுப் போயிற்றுய்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் “30/01” தீர்மானத்தில் இருந்து தற்போது 51/01 என்ற தீர்மானம் வரைக்கும் நகர்ந்துவிட்டது. எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கோப்புக்களிலே உறங்குகின்றன. எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

16 ஆண்டுகளாக அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான விடயங்களை திட்டமிட்டு, தாயகத்திலும் புலத்திலும் ஐக்கியத்தை ஏற்படுத்தி, ஒரே புள்ளியில் நகர்த்தி, விடயத்தை முன் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற முழு முயற்சியில் ஈடுபடவில்லை.

மாறாக, தென்னிலங்கையுடன் இணைந்து நல்லாட்சி அரசை ஏற்படுத்தி, சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் மேலும் மேலும் தமிழ் மக்களை பலவீனப்படுத்துகின்ற விடயத்தில் தமிழ் தேசியம் எனும் போர்வையில் இயங்குகின்ற கட்சிகள் ஈடுபட்டன. வல்லமையுள்ள – ஆளுமையுள்ள – நேர்மையான – இன விடுதலை அரசியலிலே தூய நோக்கோடு மக்களை விஸ்வாசிக்கின்ற, அந்த மக்களினுடைய உணர்வு சார் இருப்புக்களை புரிந்து கொள்ளக்கூடிய எந்தத் தலைவரும் இந்த 16 ஆண்டுகளில் உருவாகவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மை.

அதனால் தான் அந்த மக்களினுடைய போராட்ட வலிகளையும் அவர்களுடைய எண்ணங்களையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் பிம்பங்களாக செயல்படக்கூடிய நிலை தோன்றவில்லை என்பதே ஒரு துர்பாக்கியமான நிலை.

முழுமையான ஒரு நீண்ட விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இவ்வாறான நிலைமைகள் எழுவது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனாலும் கூட புலம்பெயர்ந்த தேசத்திலும் சரி, தாயகத்திலும் சரி, முரண்பட்ட நிலையிலேதான் இந்த விடயங்களைக்

தொடர்ச்சி▼



# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை வெறும் சமயச் சடங்காக்கி விட்டோமா..?

தொடர்ச்சி▲

கையாளுகின்ற தரப்பாக தமிழர் தரப்பு தொடர்ந்து காணப்படுகின்றது.

சிவில் சமூகத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வின்மை நீடிக்கின்றது. அரசியல்வாதிகள் தெற்கோடு இணங்கிப் போகக் கூடிய மனநிலையில் உணர்வுரீதியாக சிந்திக்க கூடியவர்கள். அவர்களை எதிர்க்கின்ற செயல்பாட்டுடன் புலம்பெயர் தேசத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதியினர், தொடர்ச்சியாகவே தாம் நினைத்த அரசியலைத் தாயகத்திலே செயல்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தில் உளனர். இவை எல்லாம் கடந்த 16 ஆண்டுகளில் எந்த பயனையும் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரவில்லை. மாறாக, இவர்களை எல்லாம் புறம் ஒதுக்கி விட்டு யூ– ரியூப்பர்களிடம் பணத்தை வழங்கி உதவி செய்யும் நிலைக்கு வெளிநாட்டில் உள்ளவர்கள் வந்து விட்டார்கள் என்பதுதான் காலக் கொடுமையாகக் காணப்படுகிறது.

சர்வதேசத்திடமிருந்தோ இந்தியாவிடம் இருந்தோ எமக்கு எந்தவிதமான நீதியான நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் இந்த யுத்தத்தை நடத்தியது அவர்களினுடைய அனுசரணையோடும் நிதி பங்களிப்போடும், முழுமையான வழிகாட்டுதலுடனும்தான். இந்த யுத்தத்தை வெற்றி பெற்றதில் மிகப்பெரிய பங்காற்றியது இந்தியா. ஆகவே இந்தியாவின் ஒப்புதல் இன்றி இலங்கையிலே ஏதாவது ஓர் அரசியல் மாற்றம் ஏற்படக்கூடிய எந்த வாய்ப்பும் இல்லை என்பதே கள யதார்த்த அரசியல். பூகோள அரசியல் நிலைமை.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்கள் தங்களுக்குள்ளும் முரண்பாடுகளை அதிகரித்து பல கட்சிகளாகவும் பல குழுக்களாகவும் பல பிரிவுகளாகவும் தங்களை வகுத்த்ய்க் கொண்டனர். அது எதிரிக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இவ்விடயங்களை அறிவுபூர்வமாக, தெளிந்த நிலையில் அணுகுவதற்கு அரசியல் தலைமைகள் தவறு விட்டன என்பதே நிதர்சனம்.

அதே தவறைத்தான் அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்தும் சிவில் சமூகத்தினரும் செய்துள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பொதுமைப்படுத்தி, இன அழிப்பை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னத்தை தென்னாபிரிக்க போன்ற நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது போல் அமைக்க வேண்டும் என வாதங்கள் முன்வைக்கப்பட்டு, காணிக் கொள்வனவுக்கும் நினைவுச் சின்னம் அமைப்பதற்காகவும் அன்றைய முதலமைச்சரால் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு எந்த செயற்பாடும் இன்றி மாகாண சபையும் முடிவுற்றது. மாகாண சபை முடிவுக்கு வந்து 7 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அதனை பொறுப்பெடுத்த பொதுக் கட்டமைப்பு என்னும் போர்வையிலான சில மத குருக்கள் சாதித்தவை என்ன?

இந்த பொதுக் கட்டமைப்பை உருவாக்கியது யார்? அதில் எத்தனை பேர் அங்கம் வகிக்கிறார்கள்? அதில் உள்ள சிவில் அமைப்புகள் எத்தனை? இரண்டு மதத்தினுடைய குருக்கள் மாத்திரம் எங்கிருந்தோ எழுதி வருகின்ற ஓர் அறிக்கையைப் படித்து விட்டுப் போகிறார்கள். இந்த அறிக்கையின் உடைய உள்ளடக்கத்தை நடைமுறைப்படுத்துவவதற்குரிய எந்த ஒழுங்கு முறையுன் பின்பற்றப்படுவதில்லை. சீசன் வியாபாரம் போல் வருடத்தில் ஒரு நாள் தோன்றி மறையும் அமைப்பாகவே அது காணப்படுகிறது. இதை வியாபித்து, எல்லோரையும் ஒன்றிணைத்து, வடக்கு – கிழக்கு எங்கும் கட்டமைப்புகளை உருவாக்கி, இன அழிப்புச் சின்னத்தை அமைக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் இருந்து கடந்த ஏழு ஆண்டுகளில் இவர்கள் தவறி விட்டார்கள்.

விடுதலையை மதங்கள் ஒருபோதும் விரும்புவதில்லை. ஒரு மதவாதி நல்ல தேசியவாதியாக இருக்க முடியாது. ஒரு தேசியவாதி நல்ல மதவாதியாக இருக்க முடியாது. தேசியத்துக்கும் மதத்துக்கும் இடையில் எப்பொழுதும் உலகளாவிய சித்தாந்தத்தின் அடிப்படையில் முரண்பாடே இருக்கின்றது. மதம் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட அடிமைத்துவத்தின் கூடாரம் என்கிறார் தந்தை பெரியார். சில மத குருக்களுக்கு தனிப்பட்ட ரீதியிலே விடுதலை உணர்வும் இனப்பற்றும் இருந்தாலும், அவர்களின் மதங்களின் அடிப்படைக் கோட்பாடு விடுதலைக்கு எதிரானது என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எந்த மதமும் விடுதலையை மதரீதியாக வெளிப்படையாக ஆதரித்ததில்லை. சுதந்திரம் அதிகரிக்கப்பட்டால் மத அடக்குமுறைகளும் ஒடுக்கு முறைகளும் செயலற்று போய்விடும் என்பதனால் மதங்கள் சுதந்திரத்தை ஒருபோதும் அங்கீகரிப்பதில்ல. ஏனெனில் மதங்கள் எப்பொழுதும் பழமை வாதத்தையும் அடிப்படை வாதத்தையுமே சனாதன கோட்பாட்டை முன்னிறுத்தியே செயல்பட்டு வருகின்றன. அவர்கள் மாற்றத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர்.

அரசாங்கம் எப்படி இனப்படுகொலையின் எச்சங்களை மழுங்கடிக்கின்றதோ – மக்கள் மனங்களில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றதோ – காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் அதிகமானவர்கள் உயிரிழந்து போகின்றனர், நேரடி சாட்சியங்கள் இல்லாமல் போகும் சூழ்நிலையை அரசு உளமாற விரும்புகின்றதோ – அடுத்த சந்ததிக்கு இந்த இனப்படுகொலையின் கோர முகத்தை காட்ட

தொடர்ச்சி▼



# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை வெறும் சமயச் சடங்காக்கி விட்டோமா..?

தொடர்ச்சி▲

முடியாமல் சினிமா மோகத்திலும் சமூக ஊடகங்களின் அடிமைகளாகவும் இளைய சமூகம் நாளுக்கு நாள் தங்களை அதற்குள்ளேயே தகவமைத்துக் கொள்கின்ற செயற்பாட்டுக்கு வழி வகுக்கின்றோம். இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாமல் வருடத்திற்கு ஒருமுறை ஆலயத் திருவிழா போல் வந்து நிகழ்வு நடத்தி விட்டுப் போகின்ற ஒரு சமய சம்பிரதாய பூர்வமான சடங்காகவே இதனைச் செயல்படுத்த முனைகின்றனர்.

வெளிநாட்டில் உள்ள சிலர் தமது நிகழ்ச்சி நிரலை இங்கு உள்ளவர்களின் ஊடாக ரிமோட் கண்ட்ரோலிலே செயல்படுத்த முனைவதற்கு சில சங்கங்களை அமைத்து, சில பல இடையூறுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

தாம் நினைக்கின்றவற்றை இங்கு உள்ள அடிமைகள் ஊடாகச் செயல்படுத்த முனைகின்றனர். மிகப் பெரிய இனப்படுகொலையின் சாட்சியங்களைப் பதிவு செய்யப்பட வேண்டி நாம், இந்தச் சில்லறைத் தனமான சிந்தனைக்குள் 16 ஆண்டுகள் சிதறிப் போய்விட்டோம் நாம், அடுத்த சந்ததிக்கு என்ன செய்தியைக் காட்சிப்படுத்தப் போகிறோம்?என்கின்ற எண்ணம் கூட இதில் முதன்மை வகிப்பவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை. குறைந்தது ஐந்து ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி அதிலேயே நினைவுச் சின்னம் கட்ட வேண்டிய தார்மீக பொறுப்பு இனப்படுகொலைக்கு உள்ளாகிய இனத்தில் நம் அனைவருக்கும் உண்டு.

அதனை நாம் தான் செயல்படுத்த வேண்டும் என விடாப்பிடியாக முன்னிலை வகிக்கும் சில மத குருக்கள் இன்னும் உணர்ந்து கொண்டவர்களாக இல்லை. ஒரு துரும்பை கூட அவர்கள் இதுவரை தூக்கிப் போட்டனர் என இல்லை. மக்களினுடைய உணர்வுகளை அணிதிரட்டி, மே 18 மிகப்பெரிய இன அழிப்பு, வடக்கு – கிழக்கு எங்கும் நிர்வாக செயல்பாட்டை முடக்கி, இலட்சக்கணக்கில் மக்களை திரட்டி, அறைகூவலை விடுக்க வேண்டிய நாளை சடங்காக மாற்றி, சம்பிரதாய பூர்வமான அறிக்கைகளைஒ படித்து விட்டுக் காணாமல் போய்விடுகின்றனர் என்பதே பாதிக்கப்பட்ட பலரது குற்றச்சாட்டாக இருக்கின்றது.

இன்றும் இத்துர்ப்பாக்கிய நிலையே ஏற்படலாம்.

இவர்களை வழிப்படுத்துவது யார்? வடக்குக் கிழக்கில் இருக்கின்ற சகல சிவில் சமூகங்களையும் ஒன்றிணைத்து, புலம்பெயர்ந்த செயற்பாட்டாளர்களையும் உள்ளீர்த்து, வலிமையான பொதுக் கட்டமைப்பை உருவாக்கி அதனை வெளிப்படைத் தன்மையோடு செயல்படுத்துகின்ற நிர்வாக முறைமையை உருவாக்கி, குறைந்தபட்ச விட்டுக்கொடுப்போடு, இனப்படுகொலையை வெளிப்படுத்தக் கூடிய நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டியது அவசியமாகும். இல்லையேல் இன்னும் பல ஆண்டுகள் இதே நிலைமை தொடரக்கூடிய சூழலே காணப்படுகின்றது.

தமிழ்த் தேசியம் ஒருபோதும் எந்த மதத்துக்குள்ளும் சுருங்கி இருந்தது இல்லை. விடுதலைப் புலிகளும் அதை ஆதரித்ததும் இல்லை. அனைவரும் ஒரே புள்ளியில் சந்திக்காவிட்டால் எதிரியின் எண்ணத்தை செயல்படுத்துவோர்களாகவே நாம் அனைவரும் மாறிவிடுவோம்.

வரலாறு இவர்களை ஒருபோதும் மன்னிக்காது. வார்த்தைகளுக்குள் அகப்படாத வலிகளை தந்து இனஅழிப்பை ஏற்படுத்தியவர்களை வெளிப்படுத்த வேண்டியது வரலாறு எமக்கு திணித்த பெரும் பணியாகும்.

அப்பணியில் இருந்து இப் பொதுக் கட்டமைப்பு விலகுமாக இருப்பின் மக்கள் மாற்றத்தை நோக்கி நகர்வதை தவிர வேறு மார்க்கம் இருக்கப் போவதில்லை..

“கடந்த காலத்தை கனதி மிக்கதாக நிலை நிறுத்த முடியாதவர்கள் நிகழ்காலத்தின் அடிமைகளாகவும் அதிகார வர்க்கத்தின் ஏவலாள்களாகவும்தான் இருப்பார்கள்” என்பதே ஒரு ரஷ்ய கவிஞனின் எடுகோளாக இருக்கிறது. இதில் நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதே நாம் ஒவ்வொருவரும் எங்களிடமே கேட்கும் கேள்வியாகவே உள்ளது.



# மறவோம் முள்ளிவாய்க்காலை...!

## (இது ஒரு இனத்தின் குரல்)

பதினைந்து வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனாலும் கூட இன்றும் மறவாத வடுவாய் மனமெங்கும் வியாபித்திருக்கின்றது முள்ளிவாய்க்காலின் நினைவலைகள். நீதிக்கோரிய போராட்டத்தின் எஞ்சிய எச்சங்கள் தான் இன்று முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலுக்காக நீதிவேண்டி நிற்கின்றன என்று சொல்லும் போதே மனம் கனக்கிறது.

எங்கும் அவலக் குரலும், மரண ஓலங்களும் கணீர் எனக் காதுகளைக் கிழித்தன. பீறியடித்த இரத்தம் மூச்சுப் பிடித்து உயிர் காக்க ஓடிய, எஞ்சிய மனித தசைகளிலும் மண்ணிலும் காய்ந்து வறண்டு போயிருந்தது. உயிரைக் காக்க தன் மானத்தை இழந்தும் கரைகடக்க துணிந்தது மனம் பதறியழுத பச்சிளம் குழந்தைகள் முகம்கண்டு.

என்ன பயன்? காத்துவந்த உயிரையும் கனத்துப் போயிருந்த மனங்களையும் கொத்துக் குண்டுகள் கொத்துக்கொத்தாக காவு கொண்டது. பார்க்கும் இடமெங்கும் பிணக் குவியல்களும், உருக்குலைந்த உடல் அவயங்களும், பீரங்கிப் புகைகளும், நச்சுமருந்து நாற்றமும்தான். மனம் சோர்வடைந்து, கால்கள் வலுவிழந்து, உடல் அவயம் சிதறி, நெஞ்சில் திராணியற்று வெள்ளைக் கொடி ஏந்தியவர்கள் மீது கூட தயக்கம் இன்றி பாய்ந்த தோட்டாக்கள் சில்லடையாக்கியது என் சிறுபான்மை இனத்தை. ஆட்லறி சத்தமும், ஆயுதப் போராட்டமும் இன்றும் மனங்களில் மாறாத வடுவாய்தான் இருக்கின்றது.

அறிந்தோம், எமக்கான விடியலும் வீர மண்ணுக்காய் வீழ்ந்து விட்டதென, இனியும் எமக்கு போக்கிடம் கிடையாது நிர்க்கதியாய் நிற்க வேண்டாம் என நினைத்து பல எஞ்சிய உயிர்கள் சரணடையவென எண்ணி, இதுதான் இறுதிக் கணம் என அறியாது முள்ளிவாய்க்காலின் அருகே வந்தடைந்தார்கள். சொற்ப நேரத்தில் காற்றோடு கலந்த புகையாகியது என் இனம்.

முள்ளிவாய்க்கால் குருதி வாய்க்காலாக மாறியது. உறவுகளை இழந்தும், உடைமைகளை இழந்தும், உடல் அவயங்களை இழந்தும், இதற்கும் மேலாக உயிரிலும் மேலான மானத்தையும் இழந்தும் இன்றும் மாண்டவர் நீதிக்காய் ஆண்டவனிடம் மன்றாடிக் கொண்டிருக்கும் இனம் நாங்கள்.

வருடங்கள் மாறாலாம், வரும் ஆட்சிகளும் மாறலாம் என்றும் மாறாதது எம் மனங்களில் நிறைந்திருக்கும் எம்மவர்களின் இறுதிக் குரல். தாய் நாட்டுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் உயிரை துச்சமென எண்ணி மாண்டுபோன மாவீரர் வாழ்ந்து வீழ்ந்த அதே மண்ணில் இன்று நடக்கும் மறியாட்டங்கள் அனைத்தும் மனக்கவலைகளை தூண்டுகின்ற போதிலும், இறுதிக் கணம் வரை போராடிய என் ஈழமண்ணின் மைந்தர்களுக்காகவும், எம் கண்ணின் முன் நடந்தேறிய கொடிய துர்ச் சம்பவங்களுக்கும் நீதி கிடைக்கும்வரை யாவற்றையும் கடத்தி செல்வோம் எம் அடுத்த தலைமுறைக்கு.

ஒவ்வொரு ஆண்டும் கஞ்சி கொடுத்தும், தீச்சுடர் ஏற்றியும் நாங்கள் வெளிக்காட்டுவது வெறுமனே எங்கள் வலிகளை மட்டுமல்ல, நீதிக்காய் இன்னமும் காத்திருக்கும் எம் இனத்தின் அடையாளங்கள் நாங்கள் என்பதையே. பதினைந்து வருடம் என் இனத்தின் அழிவை அழிவென்றே கூற மறுக்கும் இலங்கை அரசும், ஏறெடுத்தும் பாராத உலக நாடுகளும் என் இனத்தின் விடியலையும் தன் கட்டப்பட்ட கண்களில் மறைத்து வைத்திருக்கும் நீதி தேவதையின் கண்களும் அடுத்த ஆண்டிலாவது என் இனத்தின் மீது கரிசனை காட்டட்டும். ■

## முள்ளிவாய்க்கால்...!

கள்ளிச் செடியும்
முளைக்க மறுக்கும்
கருமை படர்ந்த
கந்தக மண்ணில்
துள்ளி எழுந்து
விழுந்த அலைகளின்
துயரை சொல்ல முடியாது
மெல்ல அசையும் நந்திக் கடல்

வெள்ளி முளைக்கும்
அந்திக் கருக்கல்
அவலப்பட்ட இனமொன்றின்
தலையில் கொள்ளி விழுந்த
நாளைக் கூறும்...

அள்ளி அவன் அன்று
வீசிய குண்டில்
காயம் பட்ட நிலவொளி
நள்ளிரவைக் கூட
பகலாய் எரிக்கும்...

கண் எட்டும் திசை எங்கும்
மண் திட்டியாய்க்
கிடக்கும் புதைகுழிக்குள்
புதையுண்டு கிடக்கும்
உறவுகளின் இறுதி மூச்சு
வீசும் காற்றில்
உஷ்ணமாய் தெரியும்

செங்குருதி நீர் கலந்த
சேற்றுக் கடற்கரையில்
வேர் அறுந்து போன
விடுதலைப் போர்
வரலாற்றைச் சுமந்து
மௌனமாக அசைந்து
கொண்டிருக்கும்
இன்னும் இந்த
முள்ளிவாய்க்கால்!

- சிவநாதன்.



# 2031 ஆம் ஆண்டிலும் தமிழகத்தில் திராவிட 'மொடல்' ஆட்சி தொடரும்

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

2026இல் மட்டுமின்றி 2031 ஆம் ஆண்டிலும் தமிழகத்தில் திராவிட "மொடல்" ஆட்சிதான் தொடரும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 5 நாள்கள் சுற்றுப்பயணமாக ஊட்டிக்கு சென்றுள்ளார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர், தெப்பக்காடு யானைகள் வளர்ப்பு முகாமில் 5 கோடி இந்திய ரூபா செலவில் கட்டப்பட்ட யானைப் பாகன்களுக்கான குடியிருப்புகள், முதுமலை புலிகள் காப்பகத்தில் 15 கிலோ மீற்றர் தொலைவுக்கு 5 கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள வான்வழி தொகுப்பு கம்பி சேவை உள்ளிட்டவற்றைத் தொடங்கிவைத்தார்.

இந்நிலையில், ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்ட முதஸ்வர் ஸ்டாலின், செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"ஊட்டியில் நடைபெற்று வரும் மலர்க் கண்காட்சி மிகவும் அழகாகவும், அருமையாகவும் இருந்தது.

மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க குடியரசுத் தலைவர், ஆளுநர்களுக்கு காலக்கெடு நிர்ணயம் செய்ய முடியாது என்பது உள்ளிட்ட 14 கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றத்தில் குடியரசுத் தலைவர் விளக்கம் கேட்டுள்ளார். இது தொடர்பாக மற்ற மாநில முதல்வர்களுடன் பேசி, அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மத்திய அரசு தொடர்ந்து சர்வாதிகாரப் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இண்டியா கூட்டணி பலவீனமாகியுள்ளது என்பது ப.சிதம்பரத்தின் தனிப்பட்ட கருத்து. 2026 மட்டுமின்றி 2031 ஆம் ஆண்டிலும் தமிழகத்தில் திராவிட மொடல் ஆட்சிதான் தொடரும். குன்னூரில் ஹாக்கி மைதானம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்." – என்றார்.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த ஹரியானா 'யூடியூபர்' கைது!

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தமை மற்றும் முக்கிய தகவல்களை பகிர்ந்தமை உள்ளிட்ட காரணத்துக்காக ஆறு யூடியூபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஹரியானாவை சேர்ந்த ஜோதி மல்ஹோத்ரா என்ற பெண் யூடியூபரும் பாகிஸ்தான் தரப்புக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது 'டிராவல் வித் ஜோ' என்ற யூடியூப் சேனலை 3.77 லட்சம் பேரும், 'டிராவல் வித் ஜோ 1' என்ற இன்ஸ்டாகிராம் கணக்கை 1.32 லட்சம் பேரும் பின்தொடர்கின்றனர். அவரது சமூக வலைதள பக்கத்தில் தேசம் முழுவதும் உள்ள பல்வேறு இடங்களுக்கு சென்று, அதை காணொலியாக பதிவிட்டுள்ளார். இதே போல அண்டை நாடுகளான சீனா, இந்தோனேசியா, பாகிஸ்தான் காணொலிகளும் அடங்கும்.

அதில் பாகிஸ்தானுக்கு சென்ற காணொலிகள் அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தான் குறித்து "பொசிட்டிவ் கன்டென்டுகள்" அவரது பயண காணொலிகளில் அதிகம்



இடம்பெற்றுள்ளன. இதோடு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான கலாச்சார ரீதியான ஒப்பீடுகளையும் பதிவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு காஷ்மீருக்கு சென்று வந்த காணொலியையும் அவர் பதிவு செய்துள்ளார். பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு 'மீண்டும் காஷ்மீருக்கு செல்ல வேண்டுமா?' என்ற தொனியில் அண்மையில் காணொலி ஒன்றையும் அவர் பதிவு செய்துள்ளார்.


கடந்த 2023 இல் முதல் முறையாக ஜோதி மல்ஹோத்ரா பாகிஸ்தான் சென்றுள்ளார். அவருக்கு பாகிஸ்தான் தரப்பு அதிகாரிகள் உதவி உள்ளனர். இதனை புலனாய்வு விசாரணை முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புதுடில்லியில் அமைந்துள்ள பாகிஸ்தான் உயர் கமிஷன் அதிகாரி ஒருவரின் அறிமுகம் அவருக்கு கிடைத்துள்ளது. அதன் மூலம் அந்த நாட்டின் உளவு அதிகாரிகளும் அறிமுகமாகி உள்ளனர். இதுவரை மூன்று முறை பாகிஸ்தானுக்கு அவர் சென்று வந்துள்ளார்.

மேலும், பாகிஸ்தான் தரப்பு அதிகாரிகளுடன் என்கிரிப்ட் செய்யப்பட்ட வாட்ஸ்அப், டெலிகிராம், ஸ்னாப்சாட் போன்ற தளங்கள் மூலம் ஜோதி மல்ஹோத்ரா தொடர்பில் இருந்துள்ளார். இந்தியாவில் அமைந்துள்ள பல்வேறு இடங்கள் குறித்த முக்கிய தகவல்களை அவர் பகிர்ந்துள்ளார். பாகிஸ்தான் தரப்பு அதிகாரி ஒருவருடன் வெளிநாடுகளுக்கு பயணமும் மேற்கொண்டுள்ளார். ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் இது போல உள்ள இயங்கும் "நெட்வொர்க்கில்" ஜோதி மல்ஹோத்ரா ஒரு பகுதி என்ற தகவலும் கிடைத்துள்ளது.

## இந்தியா - பாகிஸ்தான் விவகாரம்:

# அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட பிரிட்டன் விருப்பம்

இந்தியா – பாகிஸ்தான் இடையே நீடித்த போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை மற்றும் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை உறுதி செய்ய அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டன் பணியாற்றி வருவதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் லாம்மி தெரிவித்துள்ளார்.



மேலும் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ் தங்களின் கடமைகளை நிறைவேற்ற அனைத்து தரப்பையும் அவர் வலியுறுத்தினார்.

இரண்டு நாள் பாகிஸ்தான் பயணத்தின் இறுதி நாளில் சர்வதேச ஊடகத்திடம் பேசிய டேவிட் லாம்மி கூறுகையில்,

“நீடித்த போர் நிறுத்தம் ஏற்படுவதற்கும், பேச்சுவார்த்தை நடப்பதை உறுதி செய்வதற்கும், இந்தியா – பாகிஸ்தான் இடையே நம்பிக்கை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை உருவாக்குவதற்கும் அமெரிக்காவுடன் இணைந்து நாங்களும் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். அனைத்து தரப்பினரும் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ் தங்களின் கடமையை நிறைவேற்றிட நாங்கள் வலியுறுத்துவோம்.

பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தானுடன் இணைந்து பிரிட்டன் தொடர்ந்து போராடும். பயங்கரவாதம் அந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பிராந்தியத்துக்கும் ஒரு பெரும் களங்கம். இந்தியா பாகிஸ்தான் இரண்டும் நீண்ட வரலாற்றினைக் கொண்ட அண்டை நாடுகள். ஆனால் இந்தக் கடந்த காலத்தினால் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாத அண்டை நாடுகள். இனி இவர்களுக்குள் மோதல் ஏற்படக் கூடாது என்பதையும், போர்நிறுத்தம் நீடிப்பதையும் உறுதி செய்ய நாங்கள் விரும்புகிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.




# 10 லட்சம் பாலஸ்தீனியர்களை நிரந்தரமாக லிபியாவில் குடியமர்த்த ட்ரம்ப் திட்டம்

காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்களில் 10 லட்சம் பேரை லிபியாவில் நிரந்தரமாக குடியமர்த்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக லிபியாவுடன், அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், பாலஸ்தீனியர்களை லிபியா ஏற்றுக்கொண்டால் அந்நாட்டின் முடக்கப்பட்ட சொத்துக்களை விடுவிக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துளளது.



# இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்; 58 பாலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

காஸா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 58 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதுடன், இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கடந்த வியாழக்கிழமை முதல் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 300 பேர் காயமடைந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.





# இன்றைய ராசி பலன்கள் - 18.05.2025




கடின முயற்சிகளின் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் செயல்களில் வளர்ச்சி வெற விரும்பினால் மனதை ஒருமுகப் படுத்தி செயலாற்ற வேண்டும்.

மனச்சோர்வு ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகலாம். உங்கள் கீழ் பணிபுரிவோரிடம் நல்ல முறையில் பழகுங்கள்.

உறவில் வரும் பிரச்சினைகளை நல்ல முறையில் கையாள அமைதியாக இருந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்படுதலை தடுத்தால் நீங்கள் நல்ல முறையில் உணர்வீர்கள்.

வரவும் செலவும் இணைந்தே காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் கவலையை அளிக்கும்.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறுகளால் அவதிப்பட நேரிடலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல் திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

தொழிலில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் நேர்மை உங்களுக்கு வெகுமதியை பெற்றுத் தரும்.

தொடர்பாடலில் ஏற்படும் குறைபாடுகள் உறவில் நல்லிணக்கத்தை தடுக்கும். உறவை வலுப்படுத்த குடும்பத்துடன் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

நிதியைப் பொறுத்தவரை நல்ல நேரத்துக்காக காத்திருக்க வேண்டும். செலவு செய்வதைவிட சேமிபது நல்லது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




நீங்கள்செய்யும் செயல்களின் விளைவுகள் உங்களுக்கு அனுகூலமாக இருக்க நீங்கள் விரைந்து செயலாற்ற வேண்டும். உங்களிடம் இருக்கும் புத்தி சாலித்தனத்தின் மூலம் எதை செய்யலாம் எதை செய்யக் கூடாது என்று உணர முடியும்.

ஒப்புக் கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதற்றம் காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறையும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் நன்மை தரும்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.




உங்கள் வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள். இன்று பயணங்கள் அதிகம் காணப்படும். அது உங்களுக்கு பயனளிக்கும்.

பணிச் சூழல் இன்று சிறப்பாக காணப்படும். நீங்கள் ஆற்றும் பணிக்காக நற்பெயரை எடுப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஒவ்வொரு மணித்துளிகளையும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று பணத்தை சேமிக்கவும் நிதிநிலையை மேம்படுத்தவும் உகந்த நாள். பணியின் மூலம் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் காணப்படும். சிறந்த முறையில் திட்டமிட அமைதியாக செயலாற்றுங்கள்.

மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகபணியாளர்கள் உங்களை பாராட்டுவார்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். பெரியவர்களுடனான உறவில் நல்ல ஒத்துழைப்பு பராமரிக்கப்படும்.

நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் பணவரவை மேம்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று மகிழ்ச்சியாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படும்.




இசை கேட்பதும் திரைப்படங்களைப் பார்ப்பதும் உங்களை நிதானப்படுத்தும். உங்கள் செயல்களில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணி வளர்ச்சி மந்தமாக இருக்கும். மேலதிகாரியிடம் உங்கள் மதிப்பை நிரூபிக்க கடினமாக உழைக்க வேண்டும். இன்று ஓய்வின்றி வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியவர்களுடன் உறவாடும் போது கவனமாக இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர்களிடம் நட்பாக இருக்க வேண்டும்.

நிதிநிலையில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். இன்று பணம் செலவு செய்வதை தடுப்பது நல்லது.

சூடு சம்பந்தமான பிரச்சினைகளில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும். தலைவலி ஏற்படலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல்திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

வேலையில் பதற்றம் காணப்படும். உங்கள் கடமைகளை சரியான முறையில் செய்வதற்கு மிகவும் கவனமாக பணிகளைக் கையாள வேண்டும்.

குடும்ப உறவில் ஒற்றுமை குறைந்து காணப்படும். சிறிய அளவில் அனுசரித்துப் போவதன் மூலம் சம நிலையை பராமரிக்கலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமெனில் பதட்டத்தை கைவிடுங்கள். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய தினத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதட்டம் காணப்படும். சகபணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

உறவுமுறையைப் பொறுத்தவரை செயல்பாடுகள் காணப்படாது. பரஸ்பர நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரித்துப் போவது மிகவும் முக்கியம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். நிதி நிலையைப் பாதுகாக்க திட்டமிடல் அவசியம்.

மனஅழுத்தமும் பதற்றமும் செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.05.2025




உறவுகளில் சிக்கல் வராமல் இருப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். புதிய உறவுகள் ஏற்பட சாத்தியம் உள்ளது. மிகுந்த பொறுமை அவசியம்.

சிறந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணியை எளிதாக முடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

பொதுவாக நல்ல உறவுமுறை காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி நன்கு காணப்படும். ஆன்மீக காரியங்களுக்காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




ஒரு துடிப்பான நாள் உங்கள் முன் இருக்கிறது. உங்கள் சுய வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளும் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.

சேவை சார்ந்த ஈடுபாடு காரணமாக பணி மற்றும் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேராவண்ணம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சாதகமான உறவிற்கு இந்த நாள் ஏற்றதாக இல்லை. உங்கள் நேர்மறையான அணுகுமுறை குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை கொண்டு வரும்.

செலவினங்கள் அதிகமாகக் காணப்படும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும். எதிர்காலத்திற்காக சிறிது சேமிக்கவும்.




வெளியிடங்களுக்குச் செல்வது சிறப்பான உணர்வைத் தரும். உங்கள் செயல்களில் உணர்ச்சி பூர்வமாக இருப்பதைவிட யதார்த்தமாக இருப்பது அவசியம். இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக கவனக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உறவில் நட்பான அணுகுமுறையைக் கையாள்வது உங்களுக்கு நல்லது.

நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நிதி வளர்ச்சி இருக்காது. ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் காணப்படுகின்ளது.

பதற்றமும் பாதுகாப்பற்ற உணர்வும் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும். நிகழ்வுகளை எளிதாக எடுத்துக்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் நாள். உறுதியுடன் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

வேலையில் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும். உங்கள் வேலையில் இன்னும் கூடுதலாக ஈடுபட முயலுங்கள். உங்கள் ஆர்வத்தை அது மேம்படுத்தும்.

உறவில் நெறி முறைகளைப் பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தோர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

இன்று நிதிநிலைமை நன்றாக உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நிலையான ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தைரியம் உங்களை நலமாக வைத்திருக்கும்.

# 43 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் 30 பேர் பலி; 22 பேர் காயம்!

கடந்த 5 மாதங்களில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகங்களில் 30 பேர் கொல்லப்பட்டதுடன், 22 பேர் காயமடைந்துள்ளனர்.

43 துப்பாக்கிப்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் 29 துப்பாக்கிப்பிரயோகங்கள் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.






# விசா காலாவதியான இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு

விசா காலாவதியாகியதன் காரணமாக பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு காலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சரின் கோரிக்கையை இஸ்ரேல் அரசாங்கத்திடம் துரிதமாக முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் ஒப்புக்கொண்டார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் பல்வேறு துறைகளில் தற்போது பெருமளவான இலங்கையர்கள் பணியாற்றி வருவதாகவும் இலங்கையர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புகளை வழங்க இஸ்ரேல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் இதன்போது தெரிவித்தார் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.